பக்கங்கள்:18 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை 17.04.2022 கதிர் 163

**இனி இது ரகசியம் அல்ல!**

தம் தேசிய சிந்தனையில் ஆழ ஊறிருக்கு தமிழர்களை எடை போடுவதில் சிங்களம் எப்போதும் தவறிழைத்தே வருகின்றது. இப்போதும் அது மாறவில்லை என்றே தோன்றுகின்றது.

"கோட்டா கோ ஹோம்" ☞2

# நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் கோட்டா தலைமையில் கலந்துரையாடல்கள்



நாட்டில் தற்போது நிலவுகின்ற விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் முக்கிய கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அதன் முதற்கட்ட கலந்துரையாடலில் நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, இராஜாங்க அமைச்சர் ஹெஷான் சேமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிதி, வலுசக்தி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் மற்றுமொரு கலந்துரையாடலும் இடம்பெற்றது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கோட்டா - மஹிந்த தலைமையில் 15 பேருடன் புதிய அமைச்சரவை

## பஸில், நாமல், சமல், ஷசீந்திர 'அவுட்'

கொழும்பு, ஏப்ரல் 17

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த எவரும் எந்தவொரு அரச பதவியையும் வகிக்கக் கூடாது என்று நாடெங்கும் தொடர்ச்சியான போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைப் பிரதானமாகக்கொண்ட 15 பேர் அடங்கிய அமைச்சரவையை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ☞2

## அரசுக்கு எதிரான பிரேரணைகள் குறித்து சஜித் அணி இன்று பேச்சு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் ☞2

## கொழும்பு பங்குச் சந்தை 5 நாள்கள் பூட்டு

கொழும்பு பங்குச் சந்தை தற்காலிகமாக ஐந்து நாள்களுக்கு மூடப்படவுள்ளது எனப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, நாளை திங்கட்கிழமை முதல் 5 நாட்களுக்கு கொழும்பு பங்குச் சந்தை மூடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாட்டின் நிலை ☞2

## அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடல் யாழில் நேற்று

### பொதுவான குழு அமைக்கத் தீர்மானம்

(ந.லோகதயாளன்)

அனைத்துத்தமிழ்த்தேசியக் கட்சிகளின் கலந்துரையாடல் யாழ்., இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பிலேயே 10 தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று மாலை கலந்துரையாடலில் ஈடுபட்டன.

இந்தக் கலந்துரையாடலில் சிவில்சமூகஅமைப்புகள், காணாமல் ஆக்கப்பட்டோர் ☞17

## பிரேரணைகள் மண்கவ்வியே தீரும்; இந்த அரசைக் கவிழ்க்கவே முடியாது

### அமைச்சர் ஜோன்ஸ்டன் சூளுரை



பிரேரணைகள் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசைக் கவிழ்க்கவே முடியாது என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ☞17

## பதவிக் காலம் முடியும் வரை விலகமாட்டேன்

### கோட்டா விடாப்பிடி

மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் எனது பதவிக் காலம் முடியும் வரை நான் பதவியிலிருப்பேன்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற முன்னாள் அமைச்சர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய ஆட்சியை ☞2

## மணிவண்ணன் தரப்பினரால் முன்னணி அலுவலகம் திறப்பு



(இ.கலையமுதன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வி.மணிவண்ணன் தரப்பினரால் யாழ்ப்பாணத்தில் செயற்பாட்டு அலுவலகம் சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யாழ்., இராமநாதன் வீதியிலேயே இந்த அலுவலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் கட்சிச் செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடலும் ☞17

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற தலைப்பில் கொழும்பில் நடைபெறும் போராட்டம் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன, தெளிவுபடுத்துங்கள் என்று நண்பர்கள், வாசகர்கள் பலர் என்னை வற்புறுத்தி வருகின்றார்கள். என் மனதில் பட்டவற்றை பட்டவர்த்தனமாகக் கூற வேண்டும் என்று நினைக்கிறேன்.

அதற்கு ஒரு 'பிளாஷ் பாக்' அவசியம்.

2002 - 2004 ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகளோடு சமரசப் பேச்சு நடத்தினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அதற்கு முட்டுக்கட்டைப் போட்டுக் கொண்டிருந்தார் ஜனாதிபதி சந்திரிகா. புலிகளுடன் பேச்சு நடத்திய விடயத்தை மட்டுமே முன்நிறுத்தி, ரணில் அரசைக் கலைத்தார் அவர். அடுத்து நடந்த பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் தரப்பே ஆட்சியமைத்தது. மஹிந்த ராஜபக்ஷ பிரதமரானார்.

அதன் பின் உயர்நீதிமன்றத்தில் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான ஆயம் ஒன்று வழங்கிய அதிரடித் தீர்ப்பினால் 2005 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தும் சூழ்நிலை வந்தது.

ஒரு புறம் இனவாதம் சிளப்பும் மஹிந்த ராஜபக்ஷ. மறுபுறம் புலிகளுடன் சமரசம் பேசும் ரணில்.

இந்த நிலையில் தம்மை ஆதரிப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை என்று எண்ணிய ரணில் விக்கிரமசிங்க, அதனால் தமிழர் விடயத்தில் மிதப்போடு நடந்து கொண்டார். புலிகளுடன் தேர்தலுக்கு முந்திய ஏற்பாடு ஒன்றுக்குப் போவதை வேண்டுமென்றே தவிர்த்தார். தமிழர்கள் தம்மை விட்டால் வேறு யாருக்கும் வாக்களிக்க இடமில்லை என்று கருதிய ரணில், புலிகளைத் தூக்கி எறிந்து நடந்தார். இது தொடர்பான பல ஊடாட்டங்களில் நான் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தேன். தமக்கு வாக்களிப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கமில்லை என்று எக்காளத்தில் ரணில் நடந்து கொண்டமையே பின்நாள்களில் அவர் அரசியல் அநாதையாக்கப்படும் நிலைமை ஏற்பட்டமைக்குக் காரணம். அது பற்றிய விவரங்களை பிறிதொரு சமயம் விலாவாரியாக – தொடராக – எழுதுவேன்.

இன்று நான் குறிப்பிட விரும்புவது –

அன்று, தமக்கு வாக்களிப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை என்ற திமிர்த்தன எண்ணம்தான் ரணிலின் அரசியல் எதிர்காலத்தையே அன்று பாழாக்கியது.

இன்று, காலி முகத்திடலில் 'கார்ணிவல்' நடத்துவோர் (அது போராட்டம் மாதிரி எனக்குப் படவில்லை. இன்றைய நிலை வரை 'கார்ணிவல்' களியாட்ட விழா போன்ற பிரமைதான் எனக்கு எற்பட்டுள்ளது. அது என் தவறோ நானறியேன்.) சிந்தனையும் அப்படித்தான் உள்ளது.

2010 இலிருந்து – யுத்தம் முடிந்த காலத்திலிருந்து – ராஜபக்ஷக்களை நிராகரித்து வந்தவர்கள் – அதுவும் மிகத் தெளிவாகவும், உறுதியாகவும், புறக் கணித்து வந்தவர்கள் – தமிழர்கள். ஆகவே கோட்டாவை வீட்டுக்கு விரட்டும் போராட்டத்தில் தங்களுடன் நிற்பதைத் தவிர, தமிழருக்கு வேறு மார்க்கம் இல்லை என்ற சிந்தனையில் – 2005 இல் ரணில் எடுத்த நிலைப்பாடு போன்ற எண்ணத்தில் – இருக்கின்றனர் இன்றைய 'கார்ணிவல்' ஏற்பாட்டாளர்கள் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

எங்கள் ஆசிரியர் தலையங்கப் பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி –

இன்று கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவதற்காகப் போராடுவோர் அதற்குச் சொன்னவை இரண்டு காரணங்கள். ஒன்று – குடும்ப ஆட்சி; மற்றது – ஊழல், மோசடி, நாட்டை சூறையாடும் ஆட்சி.

ராஜபக்ஷக்கள் திரும்பவும் அதிகாரத்துக்கு வந்தால் இந்த இரண்டும் நடக்கும் எனத் திரும்பத் திரும்பக் கூறப்பட்ட போதும், அதைப் பொருட்படுத்தாமல் 2019 ஜனாதிபதித் தேர்தலிலும், 2020 பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷக்களுக்குப் பெருவெற்றியை தென்னிலங்கைச் சிங்களம் தேடிக் கொடுத்தது.

ராஜபக்ஷக்கள் கிளப்பிய பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிக்கு தலையசைத்து, அங்கீகரித்து – குடும்ப ஆட்சியையும், ஊழலாட்சியையும் அவர்கள் தொடர்வார்கள் என்று பல தரப்புகளும் எச்சரிக்க, அதையும் மீறி – வாக்கை அவருக்கு அள்ளிக் கொட்டினார்கள் சிங்கள மக்கள்.

இப்போது 'சுடுகுது மடியைப் பிடி' என்று துடிக்கின்றார்கள். அந்தத் துடிப்பு எதனால் வந்தது? ராஜபக்ஷக்களின் ஆட்சியில் தங்கள் பாக்கெட் கடிப்பதால் வந்த துடிப்பு இது. விலைவாசி உயர்வு எக்கச்சக்கம். எரிபொருள், எரிவாயு இல்லை. மின்வெட்டு. இந்தத் தொல்லைகள் தாங்காமல் ராஜபக்ஷக்களைக் கலைக்க முற்படும் 'கார்ணிவல்'காரர்கள், பௌத்த – சிங்களப் பேரினவாத வெறிப் பேச்சுக்கு எடுபட்டு வாக்களித்து விட்டோம், அதைத் திருத்தப் போகின்றோம் என்று வெளிப்படையாக – அந்த விவகாரத்தை முன்னிறுத்தி – உண்மையைப் பேசத் தயாரில்லை. இப்போதும் கூட விலைவாசி உங்கள் பக்கெட்டைக் கடிக்காவிட்டால் – பற்றாக் குறையும், தட்டுப்பாடும், மின்வெட்டும் உங்களை மலைக்க வைக்காவிட்டால் – ராஜபக்ஷக்களின் பேரினவாத வெறிப் போக்கைத் தொடர்ந்தும் போஷித்துக் கொண்டும் அவர்களின் சிறுபான்மை இனத்தவர்களுக்கு விரோதமான போக்கை அங்கீகரித்துக் கொண்டும் நீங்கள் இருந்திருப்பீர்கள்.

அப்படி இல்லை, நாங்கள் பேரினவாதத்தைத் துறந்து விட்டோம், அதை ராஜபக்ஷக்களோடு சேர்ந்து துரத்தப் போகின்றோம் என்று நீங்கள் உண்மையில் கருதினால், உங்கள் 'கார்ணிவல்' போராட்டத்தில் அது வெளிப்படையாக – முன்னணியாக – முக்கிய, பிரதான சுலோகமாக – முன்வைக்கப்படும். ஆனால் வைக்கப்படவில்லை.

பௌத்த – சிங்களப் பேரினவாத வெறியைத் தூண்டி அதைப் பயன்படுத்தித் தான் ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்துக்கு வந்தனர் என்ற பிரதான உண்மையை முன்னிறுத்தி, அதனை முக்கிய பேசுபொருளாக முன்னெடுத்து, அது தவறு என்று வெளிப்படையாகப் பிரசாரம் செய்யும் திராணியோ, துணிவோ இந்தக் 'கார்ணிவல்' போராட்டக்காரர்களுக்கோ அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கோ கிடையவே கிடையாது.

இந்த யதார்த்த உண்மை நிலையை மறைத்துக் கொண்டு, 'கார்ணிவல்' போராட்டக்கார்களுக்குப் பின்னால் தமிழர்களைக் கொண்டு செல்வது தமிழ்த் தலைமைகளின் தவறாகும்.

அதுவும், இந்தியப் பின்புல ஆதரவோடு தமிழர் தரப்புடன் சமரசப் பேச்சுக்களை கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்திருக்கையில் –

தமிழர் பிரச்சினை எனது பிரச்சினை, அதனை நான் எப்படியும் சமரசமாகத் தீர்ப்பேன், புலம் பெயர் தமிழர்களையும் அரவணைப்பேன் என்று கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருக்கையில் –

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை வெளிப்படையாகவும், முன்னிலைப்படுத்தியும் பகிரங்கமாக எதிர்க்கத் திராணியற்ற 'கார்ணிவல்'காரர்களுக்குப் பின்னால் தமிழ் மக்களைத் திரளச் செய்வது வரலாற்றுத் தவறாகும்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான நீதியின் குரல், வலிமையாகவும், வெளிப்படையாகவும், முன்னிலையாகவும், முதன்மையானதாகவும் காலி முகத் திடல் தரப்பிலிருந்து வரும் வரை ஒன்றை நம்பி, இன்னொன்றில் இறங்குவது முட்டாள்தனம் என்பதுதான் எனது கருத்து.

நீங்கள் இந்த நியாயக் கருத்தியலை உங்கள் ஒவ்வொரு அசைவிலும் பிரதான பேசுபொருளாக நிறுத்தாத வரை தமிழர்கள் உங்களுடன் தங்களை அடையாப்படுத்தவே மாட்டார்கள் என்ற யதார்த்தப் புறநிலையை 'கார்ணிவல்'காரர்களுக்கு எடுத்துச் சொல்லும் பொறுப்பை அவர்களுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிடும் சுமந்திரன் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

– மின்னல் –

---

## கொழும்பு பங்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மையைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## கோட்டா - மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற முன்னாள் அமைச்சர்களுடனான சந்திப்பின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

15 பேரைக் கொண்ட இந்த அமைச்சவையில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நிச்சயமாகப் பங்குபெறுவார் என்று தெரியவருகின்றது.

15 பேரைக் கொண்ட அமைச்சரவையானது இன்று மாலை நியமிக்கப் படலாம் என்றும் அறியமுடிகின்றது.

எனினும், இந்த அமைச்சரவையில் பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, ஷசீந்திர ராஜபக்ஷ ஆகியோர் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்காதிருக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதேசமயம், 22 அமைச்சர்கள் மற்றும் பத்து இராஜாங்க அமைச்சர்கள் என 32 அமைச்சர்கள் இன்று பதவியேற்பர் என்றும் –

நாமல் ராஜபக்ஷ வகித்த இளைஞர் விவகார அமைச்சை இ.தொ.காவின் ஜீவன் தொண்டமான் பெறுவார் என்றும் – மற்றொரு தகவல் தெரிவித்தது.

---

## அரசுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழு இன்று பேச்சு நடத்தவுள்ளது.

குறித்த பிரேரணைகளை, சபாநாயகரிடம் கையளிக்கும் காலம் தொடர்பில், இந்தக் கூட்டத்தில் முக்கியமாகக் கலந்துரையாடப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை என்பனவற்றை, அடுத்த வாரம் சபாநாயகரிடம் கையளிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதனை ஒரு வாரத்தால் பிற்போடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

சமகால பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காகச் சர்வதேச நாணய நிதியத்துடன் நாளை நடைபெறவுள்ள பேச்சுக்கு அது தாக்கம் செலுத்தும் எனப் பொருளாதார வல்லுநர்கள் வழங்கிய அறிவுறுத்தலைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

## பதவிக்காலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைக்க எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்திருந்தேன். எனினும், எதிர்க்கட்சியினர் முன்வராதமையினாலேயே, புதிய அமைச்சரவை நியமிக்கத் தீர்மானித்துள்ளேன் – என்றார்.

**தேவை**

வெள்ளவத்தையில் இரண்டு அல்லது மூன்று அறை வீடு உறுதியுடன் வாங்குவதற்கு தேவை.

**0701788354**

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட விற்பனைகள்**

HIKVISION

உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொது பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை, சிறந்த முறையில் காண்காணிப்பினை உறுதி செய்வதற்கு குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தி தரப்படும்



Chat with us on Whatsapp

+ 9475 886 0478

NO:164, PALALI ROAD,THIRUNELVELY, JAFFNA. Tel :021 2227126

Main Show Room in Northern Province

MEGA STORE



No.1 WorldWide CCTV and Video surveillance

நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

hikvisionmegastore@gmail.com

இல.164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# ரயிலுடன் கார் மோதி விபத்து ஒருவர் சாவு இருவர் படுகாயம்!

## பேராதனையில் வெள்ளி இரவு விபரீதம்



பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உற்பட்ட கெலிஓயா பிரதேச சபைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்திருக்கும் ரயில்வேக் கடவைப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு கார் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

கட்டுகஸ்தோட்ட பகுதியில் இருந்து கெலிஓயா நகரில் இருக்கும் உறவினர் வீடுகளுக்கு வந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகிய மூவர் காரில் பயணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியில் இருந்து நாவலப்பிட்டி நோக்கி சென்ற ரயிலுடன் மோதி இந்த விபத்து ஏற்ப்பட்டது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த மூவரும் பேராதனை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதில் 56 வயதான தந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இரவு நேரங்களில் ரயில் கடவையில் பாதுகாப்புக்கு யாரும் இல்லாத காரணமாகவே இத்தகைய விபத்து ஏற்படுவதாக அந்தப் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


அறிவாற்றலும் அர்ப்பணிப்பும் மிக்க கல்விமானுக்கு அஞ்சலி செலுத்த அழைக்கின்றோம்!



**அமரர். பேராசிரியர். ச. பாலகுமார்**

(துறைத் தலைவர், உயிர் இரசாயனவியல் துறை, முன்னாள் பீடாதிபதி மருத்துவபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

12.04.2022 செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த பேராசிரியர். ச. பாலகுமார் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் **17.04.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு மருத்துவபீட கூவர் கலையரங்கில்** நடைபெறவுள்ளது.

பேராசிரியரின் நேயத்துக்குரிய நண்பர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், கல்விச் சமூகத்தினர், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் காலக்கனதி மிக்க இவ் அஞ்சலி நிகழ்வில் கலந்து அமரர் பேராசிரியர் ச.பாலகுமாருக்கு இறுதிவணக்கம் செலுத்த உரிமையுடன் அழைக்கின்றோம்.

நன்றி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர்


## முல்லை., மன்னார் மீனவர் இருவர் தூத்துக்குடியில் கரை ஒதுங்கினர்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவில் இருந்து கடல் தொழிலிற்குச் சென்ற படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக இந்தியாவில் கரை ஒதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த இரு மீனவர்கள் பயணித்த படகு இயந்திரக் கோளாறு காரணமாக தூத்துக்குடியில் கரை ஒதுங்கியுள்ளது.

இதன்போது றொசான் (வயது 29) முல்லைத்தீவு மாவட்டத்தையும், சுதாகர் (வயது 26) என்னும் மன்னார் மாவட்டத்தையும் சேர்ந்த இரு மீனவர்களே இந்தியாவில் கரை சேர்ந்தனர் எனக் கூறப்படுகின்றது. இவர்கள் தொடர்பில் இந்தியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## கிளாலியில் காட்டு யானைகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்ப்பாணம் கிளாலிப் பகுதிக்குள் 5 காட்டு யானைகள் புகுந்துள்ளன என வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் இயக்கச்சிப் பகுதிவரை ஊடுருவிய யானைகள் அங்கிருந்து மருதங்கேணி ஊடாக தற்போது கிளாலிப் பகுதிக்குள் புகுந்துள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு கிளாலிப் பகுதிக்குள் உட்புகுந்த காட்டு யானைகளை மீண்டும் காட்டுக்குள் விரட்ட அதிகாரிகள் குழு ஒன்று அப்பகுதிக்கு அவசரமாக அனுப்பி வைக்கப்படுகின்றது என அதிகாரிகள் தெரிவித்தனர்.


ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் 31ம் நாள் நினைவஞ்சலியும்



36/2A, 37வது ஒழுங்கை
வெள்ளவத்தை, கொழும்பு

கடந்த 24.03.2022 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் திருமதி. சரோஜினிதேவி இராசரத்தினம்**

அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும், நினைவஞ்சலி நிகழ்வும் எதிர்வரும் **23.04.2022 சனிக்கிழமை** அன்று முற்பகல் 11.00 மணியளவில் இலக்கம் 33, அலெக்சாண்டர் வீதி, கொழும்பு 06 இல் அமைந்துள்ள **"மியாமி"** மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பூ.க. இராசரத்தினம் குடும்பத்தினர்
0112582531 / 0112554830 / 0779625405

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## திருந்தி விட்டதா சிங்களம்?

வெவ்வேறு நோக்கங்களுக்காக ஒரே காரியத்தைச் செய்ய விழைபவர்கள், இலக்கு – நோக்கு – ஒன்று என்ற அடிப்படையில் சேர்ந்து பணியாற்ற முடியும்.

ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பத் தென்னிலங்கை கிளர்ந்திருக்கும் இச்சமயத்தில் அதற்கு வடக்கு, கிழக்குத் தமிழ் இளைஞர்களும் ஆதரவு நல்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் கோரிக்கையை இப்படித்தான் நோக்க வேண்டியிருக்கின்றது.

2010, 2015, 2019, 2020 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் ராஜபக்ஷக்கள் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டனர் என்பதை விசேடமாகச் சுட்டிக்காட்டும் சுமந்திரன், ஆனால் இப்போதுதான் சிங்கள மக்கள் அதைச் சொல்கின்றார்கள் என்று சிலாகிக்கின்றார்.

ஆனால், ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பி, இந்த நாட்டுக்கு மீட்சியைப் பெற்றுத் தரும் 'புனித பணி'யில் சிங்கள தேசத்துடன் தமிழர் தேசம் மனப்பூர்வமாக இணைய முடியாது என்பதற்கான நுட்பமான காரணம் தனது அந்த வாதத்துக்குள்ளேயே புதைந்து கிடப்பதை சுமந்திரன் போன்றோர் புரிந்து கொள்ள வேண்டும்.

2010, 2015, 2019 தேர்தல்களில் மட்டுமல்ல, 2020 ஒகஸ்ட் நடந்த பொதுத் தேர்தலிலும் கூட சிங்கள மக்கள் ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பத் தீர்மானிக்கவில்லை. இன்னும் சொல்வதானால் சட்ட ரீதியாக மக்களே தமது இறைமையை வெளிப்படுத்தும் வாக்குச் சீட்டு மூலம் வழங்கிய தீர்ப்பு இன்னமும் கூட ராஜபக்ஷக்களுக்கு எதிராக வெளியாகவில்லை. தெற்கில் இன்றைய மக்கள் எழுச்சியைப் பார்த்து, மக்களின் கருத்தியல் அப்படி மாறி விட்டது என்று நாம் கூறுகின்றோம். அது உண்மையாக இருக்கலாம்.

ராஜபக்ஷக்கள் அதிகாரத்துக்கு வந்தால் குடும்ப ஆட்சி மலரும் என்பதும், அவர்கள் நாட்டைச் சூறையாடுவார்கள் என்பதும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டுமல்ல, பெரும்பான்மையானவர்களுக்குத் தெரிந்தே இருந்தது.

அவர்கள் ஆட்சிக்கு வரக் கூடாது என்று அவர்களைக் கலைப்பதற்கு தமிழினம் விரும்பி நிற்பதற்கும் –

2020 ஒகஸ்ட் தேர்தல் வரை சிங்கள தேசம் அவர்களை ஏகோபித்து வரவேற்று நின்றமைக்கும் –

இந்தக் குடும்ப எதேச்சாதிகாரமும், நாட்டை சூறையாடியமையும் காரணமல்ல.

தமிழர் தேசத்தை இரும்புக்கரம் கொண்டு சின்னாபின்னமாக்கி, அதன் இருப்புக்குக் காரணமான அடிப்படைகளை ஒவ்வொன்றாகத் தேடித் தேடி அழிப்பவர்களாக இருந்தார்கள் – இருக்கின்றார்கள் – ராஜபக்ஷக்கள். அதனால் தமிழர்கள் அவர்கள் அதிகாரத்திலிருந்து வீட்டுக்குத் துரத்தப்பட வேண்டிய விரோதிகள் என்று நோக்கினர். இன்னும் நோக்குகின்றனர்.

ஆனால், சிங்களத்தின் கதையோ வேறு. ராஜபக்ஷ குடும்ப ஆட்சி மற்றும் நாட்டைச் சூறையாடும் அவர்களின் பண்பியல்பு ஆகியவற்றை விட, அவர்களின் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்கு அவர்களுக்கு (சிங்களத்துக்கு) அதிகம் பிடித்துக் கொண்டது. விருப்பாக இருந்தது. அதனால்தான் தமிழர் தேசம் போன்ற சிறுபான்மையினர் அழிக்கப்படும் கொடூரத்துக்கு அவர்கள் பேரினவாத வெறியர்களாகத் துணை போயினர். அதனால்தான் 2019 நவம்பரிலும், 2020 ஒகஸ்ட்டிலும் கூட அவர்களுக்கு பெருவெற்றியை சிங்கள தேசம் திரண்டு அளித்தது.

இன்னும் கூட சிங்கள தேசம் அந்தப் பேரினவாதவெறிப் போக்கு நிலையிலிருந்து தான் மீண்டு விட்டதாக வெளிப்படையாகக் கூறவில்லை. அதனையும் தாண்டி ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் தேசிய சூறையாடல், தமது அன்றாட வாழ்வை பொருளாதார ரீதியில் குட்டிச்சுவராக்கி, நடு வீதிக்குக் கொண்டு வந்தமையால் – அதற்கு எதிராகவே – சிங்களவர்கள் கிளர்ந்திருக்கின்றார்கள். ராஜபக்ஷவை இது வரைத் தாம் ஆதரிக்கக் காரணமான பேரினவாத வெறியிலிருந்து இன்னும் சிங்கள தேசம் வெளிப்பட வேயில்லை.

அத்தகைய தரப்போடு உள வேறுபாடுகளைக் களைந்து தமிழர் தேசம் ஐக்கியப்பட்டு கிளர்ந்தெழுவது சாத்தியமானதாகப்படவில்லை.

# மேலும் அழிவு நிலைக்குக் கொண்டு செல்லாது நிலைமையை மிக வேகமாகச் சரி செய்யுங்கள்!

## ஈஸ்டர் செய்தியில் யாழ் ஆயர் மன்றாட்டம்

இன்றைய அவசர உடனடித் தேவையாக இருப்பது இன்றைய நிலையை வேகமாகச் சரி செய்து நாட்டை மேலும் அழிவு நிலைக்குக் கொண்டு செல்லாது பாதுகாப்பதாகும்.

யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது ஈஸ்டர் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களை முதலில் தெரிவிக்கிறோம். அதே வேளை தமிழ் – சிங்கள புத்தாண்டை ஏற்கனவே கொண்டாடியுள்ள அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.


இலங்கை நாடு இன்று என்றுமில்லாதவாறு ஒரு மிகுந்த இக்கட்டான கால கட்டத்தில் உள்ளது. இலங்கை மக்கள் எல்லோரும் இன, மத, பிரதேச வேறுபாடின்றித் தமது எல்லாத் தனித்துவங்களையும் மறந்து அன்றாட வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்காக அரச எதிர்ப்புப் போராட்டங்களில் ஒன்றிணைந்துள்ளனர்.

தமிழ் மக்கள் நடந்து முடிந்த கடந்த 30 ஆண்டு காலப் போரில் அனுபவித்த கடினமான அனுபவங்களை மீண்டும் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். 'கோப்பேகடுவ லாம்ப்' என அழைக்கப்படும் தேங்காய் எண்ணையும் பஞ்சையும் வைத்து எரித்த விளக்கில் பல காலம் வாழ்ந்தவர்கள். வீதி விளக்கில் படித்தவர்கள். சூப்பி போத்தல் என அழைக்கப்படும் சிங்கர் ஒயில் கானில் பெற்றோலை வைத்து ரியூப் மூலம் செலுத்தி வாயால் ஊதி மோட்டார் சைக்கிளைப் பெற்றோலில் இயக்கத் தொடங்கி மண் எண்ணையில் ஓடியவர்கள். சைக்கிள் பெடலைச் சுற்றி டைனமோவில் இருந்து கறண்ட் எடுத்து றேடியோ கேட்டவர்கள். மின்சாரம் உட்பட பல அடிப்படை வசதிகள் இல்லாமல் ஊரடங்கிலும் உணவுத் தட்டுப்பாட்டிலும் உயிர்ப் பயத்திலும் பல காலம் வாழ்ந்தவர்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல மாதங்களாக இன்னும் வீதியில் உள்ளனர். அரசியற் கைதிகள் இன்னும் சிறைகளில் உள்ளனர்.

தமிழ் மக்கள் கடந்த காலத்தில் பெற்ற அனுபவங்கள் எப்படியானவை என்பதைச் சிங்கள மக்களும் இன்று அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். அவற்றைச் சிறிதும் தாங்க முடியாமல் இலங்கையின் பல இடங்களிலும் பல நாள்களாக ஆர்ப்பாட்டத்தில் உள்ளனர்.

இலங்கை நாட்டை இந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று யாரும் திட்டமிட்டுச் செயற்படவில்லை. மாறாக அதிகாரத்தில் இருப்போரால் எடுக்கப்பட்ட சில வேண்டாத நடவடிக்கைகளும், தவறான முடிவுகளும் பிழையான வழிநடத்தல்களுமே நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

இன்றைய அவசர உடனடித் தேவையாக இருப்பது, இன்றைய நிலையை வேகமாகச் சரி செய்து நாட்டை மேலும் அழிவு நிலைக்குக் கொண்டு செல்லாது பாதுகாப்பதாகும். நாட்டு நலனில் அக்கறை கொண்டுள்ள இலங்கை மக்கள் அனைவரும் மண்ணின் சுபீட்சமான எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இக்காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட



வேண்டும் என இலங்கை மக்கள் அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் இலங்கை நாட்டின் சகோதர இனங்களாகத் தமது இன, மத பேதங்களை மறந்து இணைந்து நின்று, நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்திற்காக நிறைவேற்று ஜனாதிபதி முறை – குடும்ப அரசியல் – இனவாத ஆட்சி – என்பவற்றை ஒழித்து, பொருத்தமான அரசியற் திருத்தச்சட்டம், இனப்பிரச்சினைக்கான தீர்வு, புதிய யாப்பு என்பவற்றின் வழி ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க வேண்டும். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கொப்ப இலங்கையின் எல்லா இனங்களும் இணைந்து புலம்பெயர் தமிழரின் பொருளாதார பலத்தையும் இணைத்து நாட்டை ஒரு புதிய பாதையில் இட்டுச் செல்ல வேண்டும்.

தமிழ் கட்சிகள் தத்தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து இந்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்களுக்குச் சாதகமாகச் சாதுரியமாகப் பயன்படுத்த வழிமுறைகளை வகுக்க வேண்டும். அரசியற் கைதிகள் விவகாரம் – காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அரசியல் பதவியில் இருப்போர் வெற்றி – தோல்வி மற்றும் பதவியில் இருப்பு – பதவி இழப்பு என்ற நிலைப்பாடுகளைப் பெரிதுபடுத்தாது நாட்டு நலனை மட்டும் முன்வைத்து செயற்பட வேண்டும். நாடு இன்னும் மோசமான நிலைக்கு செல்வதைத் தடுக்கும் விதமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு துணிகரமான முடிவுகளை அவை தமக்குச் சாதகமாக இருந்தாலும், பாதகமாக இருந்தாலும் நாட்டு நலனுக்காக எடுக்க வேண்டும்.

இந்த இக்கட்டான நிலையில் மக்கள் அவர்கள் ஆதரவாளர்களாகவோ அல்லது எதிர்ப்பாளர்களாகவோ இருந்தாலும் அவர்களின் ஜனநாயக உரிமைகளை மதித்து அவர்களை இன, மத பேதமின்றி அமைதியாகவும் பாதுகாப்பாகவும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசிற்குரியது.

இன்றைய இக்கட்டான நிலையில் அனைவருக்கும் தேவையானது இறை நம்பிக்கையாகும். இலங்கையின் இன்றைய இக்கட்டான நிலையில் இறைவன் அனைவருக்கும் நம்பிக்கையைத் தந்து பாதுகாத்து வழிநடத்த இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். – என்று உள்ளது.

## வயோதிப தம்பதியைத் தாக்கி புதுக்குடியிருப்பில் கொள்ளை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.17

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவிபுரம் பகுதியில் தனிமையில் வீட்டில் இருந்த வயோதிப தம்பதிகள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டு நகைகள், பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தேவிபுரம் பகுதியில் தனிமையில் வசித்து வந்த வயோதிப குடும்பம் ஒன்றின் வீட்டிற்குள் உட்புகுந்த கொள்ளையர்கள் குடும்ப பெண்மணி மீது சரமாரியான தாக்குதல் மேற்கொண்டுள்ளமையுடன் வயோதிபக் கணவன் மீது வாள்வெட்டு தாக்குதலும் இடம் பெற்றுள்ளது. இதன் பின்னர் அவர்களிடம் இருந்த நகைகள் மற்றும் பணம் என்பன கொள்ளையர்களினால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

அதிகாலை அல்லலுற்று வயோதிப தம்பதிகள் கிராம அமைப்புக்களின் உதவியுடன் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# A Tribute



# Professor S. Balakumar

## Head of the Department of Biochemistry
## Former Dean, Faculty of Medicine, University of Jaffna

It is with deep sorrow that we received the sad message of the departed soul of Professor S. Balakumar.

He functioned in the Posts of Head, Biochemistry and Dean, Faculty of Medicine, Jaffna (2012-2015).

While working as an eminent Teacher and the Dean at the Faculty of Medicine, Jaffna, he shouldered many responsibilities as a dedicated teacher, a researcher, an efficient administrator, and mentor for all staff.

He had contributed in numerous ways to the development of Faculty of Medicine, Jaffna and the entire community of University of Jaffna.

Sir, you will always be remembered by the students and the community to whom you dedicated your precious life.

The Alumni, Faculty of Medicine, Jaffna extend our deepest sympathies to the bereaved family members.

**The Alumni, Faculty of Medicine, Jaffna.**

# யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவில் அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாண பிரதேசசெயலக பிரிவிற்கு உட்பட்ட சகல வர்த்தகர்களுக்கும், நிறுவை அளவை உபகரணங்கள் முத்திரையிடல் தொடர்பாக யாழ் வணிகர் கழகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவால் ஏப்ரல் மாதம் 19 ஆம், 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை அனைத்து தராசு படிகள், லீற்றர் அளவைகள், மீற்றர் கோல்கள் ஆகிய அளத்தல் கருவிகள் பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படவுள்ளன.

முத்திரை பதிக்காது நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்திற்கு பாவிப்பது மாத்திரமல்ல, வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே அனைத்து வர்த்தகர்களும் (ப.நோ.கூ.சங்கங்கள் சந்தை வியாபாரிகள் உட்பட) இதனை கருத்திற்கொண்டு இச்சந்தர்பத்தைப் பயன்படுத்தித் தங்களுடைய தராசு களுக்கு முத்திரையிடுமாறு யாழ் வணிகர் கழகம் கேட்டுக்கொள்கின்றது என அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park



## மாங்கல்யா லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 21.10.1985 மதம் - இந்து<br>ஜாதி - -Visvagulam நட்சத்திரம் - திருவோணம் 1 இல்<br>கி.பா - 14 செவ் 5 இல்<br>தகைமை - B.A தொழில் - D.O (சுகாதாரத் திணைக்களம்<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை | பிறந்த திகதி - 24.06.1987 மதம் - இந்து<br>ஜாதி - Visvagulam நட்சத்திரம் - ரோகினி<br>கி.பா - 56 செவ்/சூரி 8 இல்<br>தகைமை - G.C.E O/L தொழில் - ஆசாரித்தொழில்<br>எதிர்பார்ப்பு - படித்த மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 12.02.1996 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - விசாகம் 4 இல்<br>கி.பா - 26 செவ் 9 இல் தகைமை - B.Sc Civil Engineer<br>தொழில் - Australia PR<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன் தேவை | பிறந்த திகதி - 29.02.1990 மதம் - இந்து<br>ஜாதி -V சைவம் நட்சத்திரம் - உத்தரட்டாதி 3 இல்<br>கி.பா - 30 செவ் 5 இல்<br>தகைமை - B.B.A தொழில் - D.O அரச சேவை<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 24.07.1990 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - மகம் கி.பா - 9<br>செவ் 6 இல் தகைமை - Bachelor of Optometry<br>தொழில் - Australia PR<br>எதிர்பார்ப்பு - Doctor, Engnieer மணமகன் | பிறந்த திகதி - 19.12.1980 மதம் - இந்து<br>ஜாதி -V சைவம் நட்சத்திரம் - பரணி 4 இல்<br>கி.பா - 06 செவ்/சூரி - 3 இல்<br>தகைமை - B.Sc தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் (கொழும்பு) |
| பிறந்த திகதி - 17.12.1993 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - திருவோணம்<br>கி.பா - 18 செவ்/சூரி 10 இல்<br>தகைமை - M.B.B.S தொழில் - Doctor Australia PR<br>எதிர்பார்ப்பு - Doctor, Engnieer மணமகன் தேவை | பிறந்த திகதி - 27.10.1989 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் சைவம் நட்சத்திரம் - உத்தரம் 4 இல்<br>கி.பா - 20 செவ் 1 இல்<br>தகைமை - G.C.E A/L தொழில் - Bank Officer<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 08.12.1990 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - 24 செவ் 8 இல்<br>தகைமை - M.BB.S தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor, Engnieer மணமகன் தேவை | பிறந்த திகதி - 29.08.1991 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி 1 இல்<br>கி.பா - 13 செவ் 9 இல் தகைமை - Mechanical Engineer<br>தொழில் - Singapore Work<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 25.03.2000 மதம் - R.C<br>ஜாதி - V பெண்<br>தகைமை -Nursing<br>தொழில் - Nursing<br>எதிர்பார்ப்பு - வெளிநாட்டு (PR) மணமகன் | பிறந்த திகதி - 18.08.1991 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம் 2 இல்<br>கி.பா - 27 செவ்/சூரி 2 இல்<br>தகைமை - B.Com தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 08.09.1992 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 4 இல்<br>கி.பா - 20 செவ் 12 இல்<br>தகைமை - M.B.B.S தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை | பிறந்த திகதி - 25.03.1993 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி<br>கி.பா - 46 செவ் 8 இல்<br>தகைமை - IT Diploma தொழில் - Station Master<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 02.11.1991 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரம் 3 இல்<br>கி.பா - 10 செவ்/சூரி 11 இல்<br>தகைமை - M.B.B.S தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor, Engnieer வெளிநாட்டு PR மணமகன் | பிறந்த திகதி - 09.07.1994 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம் 3 இல்<br>கி.பா - 44 செவ் 8 இல்<br>தகைமை - B.Sc தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி ஆசிரியர் மணமகள் தேவை |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
யாழ்.நகரில் தனி வகுப்புக்கள்
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்.
G.C.E. O/L English Literature
077 766 8725
யாழ்நகர்.

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
075 330 5500,070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர் - வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால் - நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை - மூதூர் - கொழும்பு
POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com
கிளை நிறுவனங்கள் :-

| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P:021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |

# மருத்துவக் கதிர்





# இரத்த சோகைக்கான காரணமும் உணவு முறையும்

இரத்தத்தில் சிவப்பணுக்கள் குறைவதால் இரத்த சோகை ஏற்படுகின்றது. இதனை ஹீமோகுளோபின் குறைபாடு என்றும் கூறுவர். ஹீமோகுளோபின் என்பது இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களின் அளவேயாகும். ஹீம் என்பது இரும்பு, குளோபின் என்பது புரதம். எனவே இரும்புச்சத்தும் புரதச்சத்தும் இணைந்து உருவானது தான் இந்த இரத்த அணுக்கள்.

இவற்றைத்தவிர, போலிக் அமிலம், விற்றமின் B12 போன்ற விற்றமின் சத்துக்களும் இணைந்திருக்கின்றன. இந்த சத்துக்களில் எவை குறைந்தாலும் இரத்த அணுக்கள் குறைந்து ரத்த சோகை உண்டாகின்றது.

பலரும் இரத்த சோகை என்பதை ஒரு நோயாக நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் இது ஒரு குறைபாடு. எலும்பு மச்சையில் தான் சரியான அளவில் உடலின் அனைத்து பகுதிகளுக்கும் ஒட்சிசனைக் கொண்டு செல்லும் இரத்த சிவப்பணுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன். எப்போது உடலில் விற்றமின்கள் அல்லது கனிமச்சத்துக்கள் போதுமான அளவில் இல்லையோ, அப்போது இரத்த சிவப்பணுக்கள் பலவீனமாகி, விரைவிலேயே இறக்க ஆரம்பிக்கும் அல்லது எலும்பு மச்சையில் போதுமான அளவில் இரத்த சிவப்பணுக்களை உற்பத்தி செய்ய முடியாமல் போகும்.

நமது உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் சரியாக இயங்கி தத்தம் வேலைகளை செய்வதற்கு காற்றில் உள்ள ஒட்சிசன் தேவைப்படுகிறது. நம் உடலில் ஓடும் இரத்தம் ஒட்சிசனை உடல் உறுப்புகளுக்கு கொண்டு சேர்க்கின்றது. சுற்றுப்புற சுகாதாரமின்மையினால் ஏற்படும் கொக்கிப்புழுத் தொற்று, உடலில் இருக்கும் இரும்புச் சத்தை உறிஞ்சி எடுப்பதால் இரும்பு சத்து குறைபாடு ஏற்பட்டு அதன் மூலமும் இரத்த சோகை ஏற்படுகின்றது.

சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைப்பதும், தன் சுத்தமும் சுகாதாரமும் பேணிக்காத்தால் கொக்கிப் புழு தொற்றைத் தவிர்க்கலாம். அதன் மூலம் ஏற்படும் இரும்புச்சத்துக் குறைபாடையும் இரத்த சோகையையும் தவிர்க்கலாம்.

இரும்புச்சத்து குறைபாடு இருப்பவர்கள் க்ளுட்டன் அதிகம் நிறைந்த உணவுப் பொருள்களை சாப்பிடக்கூடாது. க்ளுட்டன் நிறைந்த உணவுப் பொருள்களான கோதுமை, பார்லி போன்றவை குடல் சுவற்றை மோசமாக பாதித்து, ஊட்டச்சத்துக்களான இரும்புச்சத்து போன்றவற்றை முறையாக உறிஞ்ச முடியாமல் செய்துவிடும்.

இந்த இரத்த அணுக்களின் அளவைப் பாதுகாப்பதில் ஒவ்வொருவரின் உணவு முறையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. அன்றாடம் உண்ணும் உணவுகளில் புரதச்சத்து, இரும்புச் சத்து,விற்றமின் B நிறைந்து இருந்தால் இரத்த சோகையினை எளிதில் தவிர்க்கலாம். போதியளவு பிராணவாயு சுவாசிக்காததாலும் ஹீமோகுளோபின் அளவு குறைகின்றது. இரத்த சோகையில் 3 வகைகள் உண்டு. விற்றமின் C மற்றும் B -12 குறைபாடு காரணமாக ஏற்படும் இரத்த சோகை, விற்றமின் குறைபாட்டினால் ஏற்படும் இரத்த சோகை என்று அறியப்படுகின்றது. அதே போல, இரும்புச்சத்து குறைபாடு காரணமாகவும் இரத்த சிவப்பணுக்கள் குறையலாம். இதனை இரும்புச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் இரத்த சோகை என்று அறியப்படுகிறது. நோய்த் தொற்று காரணமாக ஏற்படும் இரத்த சோகை, அனீமியா என்று அழைக்கப்படுகின்றது.


### இரத்த சோகைக்கான அறிகுறிகள்

1. மயக்கம், உடற்சோர்வு
2. அடிக்கடி தலைவலி, தலை சுற்றல்,
3. தோல் வெளுத்தல்
4. உடல் வெப்பம் குறைதல்
5. பசியின்மை
6. நெஞ்சுவலி
7. சீரற்ற இதயத்துடிப்பு
8. வாய் மற்றும் நாக்கில் வீக்கம்
9. சிறிய வேலை செய்தாலே அதிகமாக மூச்சிரைத்தல், மூச்சுத்திணறல்
10. குழந்தைகள் சோர்ந்து காணப்படுவது, எதிலும் நாட்டமில்லாமல் இருப்பது, படிப்பில் கவனக் குறைபாடு
11. கவர்ந்து கவனிப்பதில் பிரச்சினைகள், வாசிக்கும் திறனில் தாமதம், மற்றும் மோசமான பாடசாலைச் செயற்திறன்கள் என்பனவற்றை விளைவிக்கும்.
12. வளைந்திருக்கும் நகங்கள்
13. தலைமுடி உதிர்தல்
14. தோல் வெளிர் மற்றும் மஞ்சள் நிறமாகவும் தோன்றலாம்.
15. பொதுவான வேலைத்திறனும் குறையும்

### இரத்த சோகை யாரை பாதிக்கும்?

1. மாதவிடாயின் போது அதிக இரத்தப்போக்கு உள்ளவர்கள்
2. இரைப்பை நோய்கள், அல்சர் அல்லது வயிற்று புற்றுநோய் உள்ளவர்கள்
3. சிறுநீரக நோய்கள் உள்ளவர்கள்
4. வறுமை நிலை உள்ளவர்கள்
5. உடற்பருமன் அல்லது தவறான உணவுப் பழக்கங்கள்
6. கர்ப்பிணிகள், பாலூட்டும் பெண்கள்
7. விற்றமின், இரும்புச்சத்து குறைவாக எடுத்துக்கொள்வோர்
8. குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகள்

சிலருக்கு அறுவை சிகிச்சை அல்லது சிசேரியன் பிரசவத்தின் போது, அதிகளவு இரத்தம் வெளியேறும். இப்படி இரத்தம் வெளியேறும் போது இரும்புச்சத்து குறைபாடு ஏற்படக்கூடும்.




உடலினுள்ளே ஏற்படும் காயங்களால் இரத்தக் கசிவு ஏற்பட்டு, அதுவும் இரும்புச்சத்து குறைபாட்டை உண்டாக்கும்.

இந்த உயிரணுக்கள், சாதாரண இரத்தச் சிவப்பு அணுக்களைப்போல உடல் முழுவதும் அரிவாள்செல் இரத்த சோகை என்பது சிவப்பு அணுக்களை உருக்குலையச் செய்யும் பரம்பரை வியாதியாகும் நன்கு நீந்திச் செல்ல முடியாது. இதனால் உடலுக்கு குறைந்தளவு ஒட்சிசனே கிடைக்கின்றது.

### இரத்த சோகைக் குணமாக்க வழிமுறைகள்

இரும்புச்சத்து அதிகமுள்ள பயறு வகைகள், சோயா பன்னீர், பச்சை நிறக் காய்கறிகள், புளிச்ச கீரை, அகத்தி, புதினா, கறிவேப்பிலை உலர்ந்த முந்திரிப்பழம், பேரிச்சம் பழம், உலர் திராட்சை, அவல், மாதுளைப் பழம், முருங்கைக் கீரை, பீன்ஸ், உருளைக்கிழங்கு, ஒலிவ் ஆகிய உணவுகள் சாப்பிடவும். விற்றமின் C அதிகம் உள்ள உணவுகள் சாப்பிடவும். அனைத்து சிட்ரிக் பழங்களிலும் விற்றமின் C நிறைந்துள்ளது.

தேவைப்பட்டால் மருத்துவர் பரிந்துரைக்கும் ஊட்டச்சத்து மருந்துகளை எடுத்துக்கொள்ளலாம். இரும்புச்சத்து மருந்து மாத்திரைகள் சில வகையான மருந்துகளில் இடையூறை ஏற்படுத்தக்கூடும். ஆகவே மருத்துவரிடம் ஆலோசனை பெறாமல் எந்தவொரு இரும்புச்சத்து மருந்து மாத்திரையையும் உட்கொள்ளக்கூடாது.

இரத்த சோகைக்கான அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரை அணுகவும். மருத்துவர் பரிந்துரைக்கும் ஊட்டச்சத்து உணவுகளை மட்டும் எடுத்துக்கொள்ளவும்.

நாம் உண்ணும் வேர்க்கடலை ,பருப்பு வகைகள், பயறு, கொண்டைக்கடலை, பட்டாணி போன்றவைகளில் அதிகமான புரதச்சத்து அடங்கியுள்ளது, இவை தவிர பால், தயிர், சீஸ், பாலாடைக்கட்டியும் புரதம் நிறைந்தது.

அசைவ உணவுகளான மீன், முட்டை, ஆட்டீரல், கறி வகைகளில் புரதமும், இரும்புச் சத்தும் அதிகமாக உள்ளது. ஆனால், இவற்றை அளவிற்கு அதிகமாக உண்டால் தேவையில்லாத கொழுப்பு வந்து சேர்க்கும். எனவே அளவோடு சாப்பிடுவது நல்லது.

போலிக் அமிலம் – சாமை, வரகு, அகத்தி கீரை, குடை மிளகாய், சவ்சவ், வெண்டி, பாகற்காய், முருங்கை, வாழைப்பூ, பப்பாளி, விளாம்பழம், கொய்யா, பீட்ருட், முள்ளங்கி, வேர்க்கடலை, பனீர், நண்டு ஆகிய உணவு வகைகளிலிருந்து எளிதாக பெறலாம்.

இரத்த சிவப்பணுக்கள் குறைவாக இருப்பவர்கள், சூரிய கதிர்கள் சருமத்தின் மீது படுமாறு நீண்ட நேரம் இருக்க வேண்டும். அதிலும் அதிகாலை வெயில் சருமத்தில் பட வேண்டும். இதனால் சூரிய கதிர்களில் உள்ள விற்றமின் D உடலில் அதிகரித்து, இரும்புச் சத்தை உறிஞ்ச உதவி புரிந்து , இரும்புச்சத்து குறைபாட்டில் இருந்து விடுவிக்கும்.

எண்ணெய் மசாஜ் உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்த உதவும். அதிலும் ஒலிவ் , தேங்காய் எண்ணெய் அல்லது கடுகு எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்தி முழு உடலையும் மசாஜ் செய்து வந்தால், உடல் முழுவதும் இரத்த ஓட்டம் சிறப்பாக இருந்து, இரத்த சோகையில் இருந்து விடுபடலாம்.

இரும்புச்சத்து குறைபாடு அல்லது இரத்த சோகை உள்ளவர்கள், இரும்பு பாத்திரத்தில் சமைத்து சாப்பிடுவதன் மூலம், இரும்புச்சத்து குறைபாட்டில் இருந்து விடுபடலாம். ஏனெனில் இப்படி சமைத்து சாப்பிடுவதன் மூலம், உண்ணும் உணவில் இரும்புச்சத்தின் அளவு அதிகரிக்கும்.

இதற்கு முறையான சிகிச்சையளிக்கப்படாவிட்டால் இரத்த சோகை உங்களை மிகவும் சோர்வடையச் செய்யும் மற்றும் இதய நோய்களைத் தூண்டும். சில சந்தர்ப்பங்களில், அது மிகவும் கடுமையான நிலையை அடைந்தால் அது உயிருக்கு ஆபத்தாகவும் மாறும்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir


Page I English for all Sunday the 17th of Apirl 2022


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

# In the Park



## ANSWER THE QUESTIONS:

a) What game are the teenagers in the background playing?

-----------------------------------------------

b) What is the black and white dog doing?

-----------------------------------------------

c) What is the little boy in the blue Tshirt and white shorts doing?

-----------------------------------------------

d) Is the little girl with the blue helmet riding a horse?

-----------------------------------------------


e) What is the little girl on the park bench doing?

-----------------------------------------------

## Answer TRUE or FALSE:

1) Two children are sitting on the park bench. They are eating
-----------------------------------------------

2) A team of boys are playing rugby
-----------------------------------------------



3) A lady is helping a young cyclist to put her helmet on
-----------------------------------------------

4) There are six children queueing up to have a go on the slide.
-----------------------------------------------

5) It is raining.
-----------------------------------------------



6) A brown dog is watching two squirrels.
-----------------------------------------------

7) The picnic basket is under the table
-----------------------------------------------

8) A brown and white dog is sitting beside the slide.
-----------------------------------------------

9) The little boy in the purple T-shirt is putting mustard on a sandwich
-----------------------------------------------

10) TWO Squirrels are climbing a tree
-----------------------------------------------

## Underline the correct Answer

1. If they hadn't been drunk, the doorman ________.
a) would have let them in b) had let them in

2. If you ________ your last exam, you would have graduated in May.
a) have not failed b) hadn't failed

3. My mother ________ this apartment if she had known it was so noisy.
a) wouldn't have rented b) did not rent

4. I would not _______ to see this movie if I had known how boring it was.
a) go b) have gone

5. If I hadn't lost my cellphone, I _______ you.
a) would have called b) would call

6. If I hadn't driven so fast, I _______ into an accident.
a) would not get b) would not have gotten

7. If the store _______ open, I would have bought some food.
a) would be b) had been

8. I _______ on time if I hadn't missed the bus.
a) had been b) would have been

9. If you hadn't changed your hairstyle, I ________ you.
a) would have recognized b) had recognized

10. If I _______ full, I would have eaten more.
a) would not have been b) hadn't been



## Underline the correct Answer

**1. Sarah is going on a diet ... lose weight.**
A) in order to B) for C) so that

**2. Paul wanted to buy some land by the lake ... a restaurant.**
A) so as to build B) for build C) so that build

**3. Nick had to go to London ... a business meeting.**
A) so that B) to C) or

**4. We took the car to a garage ... could take a look at it.**
A) to a mechanic B) for a mechanic C) so that a mechanic

**5. Pack a first aid kit ... prepared for anything.**
A) so that you'll be B) for will be C) to will be

**6. Jessica is learning English ... a better job.**
A) to get B) for get C) so that gets



**7. David keeps a dog ... guard the house.**
A) so that B) for C) to

**8. Trevor studies encyclopedias ... can answer quiz questions.**
A) so that he B) to C) for he

**9. Sarah is saving up ... a holiday.**
A) so that B) for C) in order to

**10. Products are advertised through the media ... will become familiar with the variety of products available.**
A) for consumers B) in oder to consumers C) so that consumers

**Man is born free but he is in chains everywhere - J.J.Rousseau**

# What is an Economic Depression

An economic depression is a period of sustained, long-term downturn in economic activity in one or more economies. It is a more severe economic downturn than a recession, which is a slowdown in economic activity over the course of a normal business cycle.

Economic depressions are characterized by their length, by abnormally large increases in unemployment, falls in the availability of credit (often due to some form of banking or financial crisis), shrinking output as buyers dry up and suppliers cut back on production and investment, more bankruptcies including sovereign debt defaults, significantly reduced amounts of trade and commerce (especially international trade), as well as highly volatile relative currency value fluctuations (often due to currency devaluations). Price deflation, financial crises, stock market crash, and bank failures are also common elements of a depression that do not normally occur during a recession.

***Definitions***

In the United States of America the National Bureau of Economic Research determines contractions and expansions in the business cycle, but does not declare depressions. Generally, periods labeled depressions are marked by a substantial and sustained shortfall of the ability to purchase goods relative to the amount that could be produced using current resources and technology (potential output). Another proposed definition of depression includes two general rules:

There are also differences in the duration of depression across definitions. Some economists refer only to the period when economic activity is declining. The more common use, however, also encompasses the time until the economic activity has returned close to normal levels.

A recession is briefly defined as a period of declining economic activity spread across the economy (according to NBER). Under the first definition, each depression will always coincide with a recession, since the difference between a depression and a recession is the severity of the fall in economic activity. In other words, each depression is always a recession, sharing the same starting and ending dates and having the same duration.

Under the second definition, depressions and recessions will always be distinct events however, having the same starting dates. This definition of depression implies that a recession and a depression will have different ending dates and thus distinct durations. Under this definition, the length of depression will always be longer than that of the recession starting the same date.

A useful example is a difference in the chronology of the Great Depression in the U.S. under the view of alternative definitions. Using the second definition of depression, most economists refer to the Great Depression, as the period between 1929 and 1941. On the other hand, using the first definition, the depression that started in August 1929 lasted until March 1933. Note that NBER, which publishes the recession (instead of depression) dates for the U.S. economy, has identified two recessions during that period. The first between August 1929 and March 1933 and the second starting in May 1937 and ending in June 1938.

# Sri Lanka is facing an economic and political crisis

Protesters demand the resignation of Sri Lanka's President Gotabaya Rajapaksa in Colombo on April 4.

Sri Lanka, an island nation of 22 million, is facing an economic and political crisis, with protesters taking to the streets in defiance of curfews and government ministers stepping down en masse.

Driving the discontent is the worst economic downturn since the South Asian country gained independence in 1948, with crippling inflation sending the cost of basic goods skyrocketing.

Anger, which has been simmering for weeks, boiled over last Thursday, turning protests violent -- and throwing the government into disorder.

What caused the economic crisis?

Experts say the crisis has been years in the making, driven by a little bad luck and a lot of government mismanagement.

Over the past decade, the Sri Lankan government has borrowed vast sums of money from foreign lenders to fund public services, said Murtaza Jafferjee, chair of Colombo-based think tank Advocata Institute.




This borrowing spree has coincided with a series of hammer blows to the Sri Lankan economy, from both natural disasters -- such as heavy monsoons -- to man-made catastrophes, including a government ban on chemical fertilizers that decimated farmers' harvests.

These problems were compounded in 2018, when the President's dismissal of the Prime Minister sparked a constitutional crisis; the following year, when hundreds of people at churches and luxury hotels were killed in the 2019 Easter bombings; and from 2020 onwards with the arrival of the Covid-19 pandemic.

Facing a massive deficit, President Gotabaya Rajapaksa slashed taxes in a doomed attempt to stimulate the economy.

But the move backfired, instead hitting government revenue. That prompted rating agencies to downgrade Sri Lanka to near default levels, meaning the country lost access to overseas markets.

Sri Lanka then had to fall back on its foreign exchange reserves to pay off government debt, shrinking its reserves from $6.9 billion in 2018 to $2.2 billion this year. This impacted imports of fuel and other essentials, which sent prices soaring.

Topping all that, the government in March floated the Sri Lankan rupee -- meaning its price was determined based on the demand and supply of foreign exchange markets.

That move appeared aimed at devaluing the currency to qualify for a loan from the International Monetary Fund (IMF) and encourage remittances.

However, the plunging of the rupee against the US dollar only made things worse for ordinary Sri Lankans.

What does this mean for people on the ground?

For Sri Lankans, the crisis has turned their daily lives into an endless cycle of waiting in lines for basic goods, many of which are being rationed.

In recent weeks, shops have been forced to close because they can't run fridges, air conditioners or fans. Soldiers are stationed at gas stations to calm customers, who line up for hours in the searing heat to fill their tanks. Some people have even died waiting.

Some are caught in an impossible position -- they have to work to feed their families, but must also queue for supplies. One street sweeper with two young sons told CNN she quietly slips away from work to join lines for food, before hurrying back.

Even members of the middle class with savings are frustrated, fearing they could run out of essentials like medicine or gas. And life is made more difficult by frequent power cuts that plunge Colombo into darkness, sometimes for more than 10 hours at a time.

What's next?

Sri Lanka is now seeking financial support from the IMF and turning to regional powers that may be able to help.

During last month's address, President Rajapaksa said he had weighed the pros and cons of working with the IMF and had decided to pursue a bailout from the Washington-based institution -- something his government had been reluctant to do.

Sri Lanka has also requested help from China and India, with New Delhi already issuing a credit line of $1 billion in March -- but some analysts warned that this assistance might prolong the crisis rather than solve it.

There is still much uncertainty around what comes next; national consumer price inflation has almost tripled, from 6.2% in September to 17.5% in February, according to the country's central bank. And Sri Lanka has to repay about $4 billion in debt over the rest of this year, including a $1 billion international sovereign bond that matures in July.

And the situation has prompted alarm from international observers. Speaking at a news briefing on April 5, Liz Throssell, a spokesperson for the UN High Commissioner for Human Rights, expressed concern over Sri Lanka's official response.

The government's curfew, social media blackout, and police action in breaking up the protests could prevent or discourage people from expressing their grievances, she said, adding that these measures "should not be used to stifle dissent or hinder peaceful protest." She said the UN was watching "closely," and warned against "the drift to militarization and the weakening of institutional checks and balances in Sri Lanka."

CNN's Julia Hollingsworth, Rukshana Rizwie and Iqbal Athas contributed reporting.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



# முல்லாவும் மூன்று அறிஞர்களும்

முல்லா நஸ்ருதீன் இருந்த நாட்டில் நிறைய கல்வி கற்ற அறிஞர்கள் இருந்தார்கள், அவர்களோடு ஏனைய நாட்டு அறிஞர்கள் போட்டி போடுவார்கள், அதனால் மக்களுக்கு நல்ல நல்ல விசயங்கள் தெரிய வரும். சில நேரங்களில் போட்டி கடுமையாக இருக்கும், வெற்றி பெற்றவருக்கு பட்டமும், பணமும் கிடைக்கும்.

ஒருமுறை மூன்று மெத்த படித்தவர்கள், எல்லாமே தெரிந்தவர்கள் என்று மனதில் நினைத்துக் கொண்டு, அடுத்தவர்கள் பதில் சொல்ல முடியாத அளவுக்கு கேள்வி கேட்பார்கள். அவர்கள் போட்டிக்கு அழைத்தாலே, ஏன் வீணாக அவமானப்பட வேண்டும் என்று நினைத்து நிறைய பேர் போட்டியை புறக்கணிப்பார்கள்.

அப்படிபட்ட அந்த மூன்று பேரும் முல்லா இருந்த நாட்டிற்கு வந்து அரசனிடம் எங்களுடன் போட்டி போட உங்கள் நாட்டில் புத்திசாலிகள் இருந்தால் வரச் சொல்லுங்க என்றனர். உடனே அரசர் தன்னுடைய அரண்மனை அறிஞர்களைப் பார்க்க அவர்களோ தலையை தொங்கப் போட்டு விட்டார்கள், யாரும் போட்டிப் போட விருப்பம் தெரிவிக்கவில்லை, உடனே அந்த மூன்று பேரும், சப்தமாக சிரித்து, உங்கள் நாட்டில் அனைவரும் முட்டாள்களா? எங்களுடன் போட்டிப்போட யாருமே இல்லையா? அப்படியே போட்டி போட்டு எங்களை வென்றால் நாங்கள் இந்த நாட்டுக்கு அடிமைகள், இல்லை என்றால் நீங்கள் அனைவரும் எங்களுக்கு அடிமை போட்டிக்குத் தயாரா? என்று கிண்டலாக கேட்க, அரசனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை.

நாளை நாட்டின் நடுவில் இருக்கும் ஒரு இடத்தில் போட்டி நடைபெறும், யார் வேண்டும் என்றாலும் கலந்து கொள்ளலாம், இந்த மூன்று பேரையும் வெற்றி கொண்டால் நிறைய பரிசுகள் கிடைக்கும், இல்லைஎன்றால் கடுமையான தண்டனை என்று அறிவிப்பு செய்தார். அன்றைய இரவே புத்திசாலிகள் என்று சொல்லித் திரிந்த நிறைய பேர் ஊரை விட்டு போய் விட்டார்கள். அடுத்த நாள் காலையில் அங்கே நிறைய மக்கள் கூடி இருந்தார்கள், அவர்களோடு போட்டி போட்டு தோற்றவர்கள் தலை குனிந்து நின்று கொண்டிருந்தார்கள். யாருமே அவர்களை வெற்றி கொள்ள முடியவில்லை என்ற ஆத்திரத்தில் அரசன் அமர்ந்திருந்தான்.

அந்த பக்கமாக முல்லா பக்கத்து நாட்டில் வியாபாரம் செய்து முடித்து தன்னுடைய கழுதையுடன் ஊருக்கு வந்தார், என்னடா இங்கே இவ்வளவு கூட்டமாக இருக்கிறதே, என்று வேடிக்கை பார்த்தவருக்கு பயங்கர அதிர்ச்சி. அவரது மச்சான் வேறு கையை கட்டி தலை குனிந்து நின்றுக் கொண்டிருந்தான். மக்களிடம் என்ன ஏது என்று கேட்டு தெரிந்துக் கொண்டார், மச்சானின் தொந்தரவு இனி இருக்காது என்று நினைத்தார். சிறிது நேரத்திலேயே தன் நாட்டு மக்கள் யாருமே பதில் சொல்லவில்லை, அப்படி செய்தால் தன் நாட்டிற்கு பெருத்த அவமானம் ஆகுமே என்று நினைத்ததோடு இல்லாமல் இந்த அறிஞர்களுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

தன்னுடைய கழுதையோடு கூட்டத்தின் நடுவே சென்று, அரசனை பார்த்து வணக்கம் சொல்லிவிட்டு, தான் போட்டியிடப்போகிறேன் என சொன்னார். அரசனும் சரி என்றார், ஆனால் அந்த மூன்று பேரும் முல்லாவின் ஆடை, கழுதையோடு நின்ற நிலையை பார்த்து ஏளனமாக சிரித்து, உன்னிடம் நாங்கள் ஆளுக்கு ஒரு கேள்வி கேட்போம், நீ சொல்லும் பதிலை நாங்கள் சரி, தவறு என்று சொல்வோம், அப்படி நாங்கள் பதில் சொல்லவில்லை என்றால் உனக்கும் இந்த நாட்டுக்கும் அடிமை. நீ தோற்றால் இந்த நாடும், மற்றவர்களும், நீயும் வாழ்நாள் முழுவதும் எங்களுக்கு அடிமை.

முல்லா: அது எல்லாம் சரி, கேள்வியை கேளுங்கப்பா, சீக்கிரம் வீட்டுக்கு போகணும்?

முதல் அறிஞர் முல்லாவிடம், இந்த உலகின் மைய இடம் எது? என்று கேட்டார்.

அதற்கு முல்லா, என் கழுதை நிற்குமிடம் தான் உலகின் மையம், என்றார்.

அந்த அறிஞர், அதை உண்மை என்று நிரூபியுங்கள் பார்க்கலாம், என்றார். உடனே முல்லா, அது உங்கள் வேலை, நான் சொன்னது தவறு என்று நிரூபியுங்கள். உலகை அளந்து பாருங்கள். அப்போது என் கழுதை நிற்குமிடம் உலகின் மையம் என்று தெரியும், என்றார். முதல் அறிஞர் என்ன சொல்வது என்று தெரியாமல் பேசாமல் இருந்தார்.

அடுத்து இரண்டாம் அறிஞர், ஆகாயத்தில் மொத்தம் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன? என்று கேட்டார்.

அதற்கு முல்லா, என் கழுதையின் உடலில் எத்தனை உரோமங்கள் இருக்கின்றனவோ அத்தனை நட்சத்திரங்கள் ஆகாயத்தில் உள்ளன. வேண்டுமானால் எண்ணிப் பாருங்கள், என்றார். இரண்டாம் அறிஞர் பேசாமல் இருந்துவிட்டார்.

மூன்றாவது அறிஞர் முல்லாவிடம், மக்கள் கடைப்பிடிப்பதற்காகச் சான்றோர்கள் வகுத்த நெறிகள் எவ்வளவு? என்றார். அதற்கு முல்லா, அறிஞர்களே உங்கள் மூவருடைய தாடியிலும் எவ்வளவு உரோமங்கள் உண்டோ அத்தனை நெறிகளைச் சான்றோர்கள் மக்களுக்காக வகுத்துள்ளனர். இதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள். உங்கள் மூவருடைய தாடியிலும் உள்ள உரோமங்களைப் பிடுங்கி எண்ணிக்கை சரியானது என்று நிரூபிக்கிறேன், என்றார்.

இவ்வாறு முல்லா கூறியதும், வேண்டாம், வேண்டாம். நீங்கள் சொன்ன பதிலை ஒப்புக் கொள்கிறோம் என்று கூறி அந்த அறிஞர்கள் தாங்கள் தோற்றுப் போனதை ஒப்புக் கொண்டு தங்கள் பரிசுகளை முல்லாவிடம் சமர்ப்பித்தனர், தங்களை அந்த நாட்டின் அடிமை என்று அறிவித்தார்கள். போட்டியில் வென்றமையால் அரசன் முல்லாவை கட்டிப்பிடித்து, நன்றி சொன்னார். என்ன கேட்டாலும் கொடுக்கத் தயார் என்றார், உடனே அந்த மூன்று அறிஞர்களையும் தங்கள் நாட்டிற்கு போக அனுமதிக்க வேண்டும், இனிமேல் அவர்கள் இது போல் போட்டியிட மாட்டார்கள் என்றார். அந்த மூவரும் முல்லாவுக்கு நன்றி சொல்லி தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடிப் போனார்கள். முல்லாவின் புகழ் மேலும் பரவியது.



# கடல் இரகசியம்

சூரியனுடைய சுட்டெரிக்கும் ஒளியைத் தான் வாங்கிக் கொண்டு நம்மை உயிருடன் வாழ வைப்பது கடல்தான். பூமியில் தண்ணீரின் அளவு 70.8%. கடலுக்குள் 47,000 மைல் நீளம் மலைத் தொடர்கள் உள்ளன. எவரெஸ்ட் உயரமே 29,829 அடிதான். ஆனால் கடலுக்கடியில் பாதாளத்தின் ஆழம் 36,204 அடி ஆகும்.

கிட்டத்தட்ட பூமியின் 71% மேற்பரப்பை சமுத்திரங்கள் தான் ஆள்கின்றன. சாதரணமாகவே தன்னுள் பல வகையான மர்மங்களையும் விசித்திரங்களையும் கொண்டுள்ள கடலின் பெரும்பாலான பகுதிகளுக்கு இந்நாள்வரையிலாக யாரும் சென்றதே இல்லை, செல்வதற்கு முயலவும் இல்லை. அப்படியாக, சமுத்திரம் மென்மேலும் பற்பல இரகசியங்களை தன்னுள் கொண்டுள்ளது என்பது தான் நிதர்சனம்.

அதுவொரு பக்கம் இருக்க மனிதன் சென்ற, மனிதனால் சாட்சிக்கு உட்படுத்தப்பட்ட கடல் பகுதிகளில் ஏற்பட்ட சில நிகழ்வுகளுக்கு எப்படி என்ற விளக்கம் இல்லை, ஏன் என்ற புரிதல் இல்லை என்பது தான் இரகசியத்துள் உள்ள இரகசியமாகும்.

# விடுகதைகளும் விடைகளும்

1.கோயிலுக்குப் போனானாம் எங்க தம்பி தீர்த்தம் விட்டானாம் தங்கத் தம்பி - அது என்ன?

**தேங்காய்**

2.பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?

**பெற்றோல்**

3.இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?

**இதயம்**

4.ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?

**கொடி**

5.தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன?

**தொட்டா சுருங்கிச் செடி**

6.ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல; சூடு கொடுக்கும், தீ அல்ல; பளபளக்கும், தங்கம் அல்ல. அது என்ன?

**சூரியன்**

7.என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார் ?

**துவாரம்**

8.ஒற்றைக் காலில் ஆடுவான், ஓய்ந்து போனால் படுப்பான். அவன் யார்?

**பம்பரம்**

9.அண்டமென்ற பெயரும் உண்டு, அடைகாத்தால் குஞ்சுமுண்டு. அது என்ன?

**முட்டை**

10.அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?

**நிலா**





# உலகின் தீரா மர்மங்கள் எகிப்தும் பிரமிடுகளும்



மர்மங்கள் என்று எடுத்துக்கொண்டால் இவ்வுலகம் முழுவதும் விதவிதமாக கொட்டிக்கிடக்கும். பல மர்மங்களில் ஒரு சிலவுக்கு காலப்போக்கில் விடை காணப்பட்டிருக்கின்றன.

எகிப்தின் பிரமிடுகளைப் பற்றி நம்மில் சிலபேர் முன்னரும் பலபேர் மம்மி பார்ட் - 1 மற்றும் பார்ட் - 2 திரைப்படங்கள் பார்த்த பின்னரும் அறிந்திருப்போம். பிரமிடுகள் என்றாலே இன்றளவும் ஒரு மலைப்பும் ஆச்சரியமும் உண்டாவது நிச்சயமாய் அவற்றின் தனிச்சிறப்பே.

'பிரமிடு' என்றால் பலரும் சொல்வது, அது எகிப்தில் இருக்கும் ஒரு கட்டடம். அதில் அக்காலத்தில் இறந்த மன்னர் போன்றவர்களின் சடலத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். 'மம்மி' என்றழைக்கப்படும் அவற்றின் உடல்கள் இன்னமும் கெடாமல் இருக்கின்றன. அது தவிர பல்வேறு புதையல்களும் அங்கே இருக்கக்கூடும் என்பதுதான். ஆனால் இவை மட்டும் தான் பிரமிடா?

எகிப்து நாட்டில் காணப்படும் பிரமிடுகள் கற்களால் கட்டப்பட்ட பிரம்மாண்டங்கள். 2008ம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட 138 பிரமிடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பிரமிடுகளுக்குப் பின்னாலான மர்மங்கள் கணக்கிலடங்காதவை. பிரமிட்கள் சாதாரண மக்களை மட்டுமல்ல, பொறியியல் வல்லுநர்களையும் வியக்க வைக்கும் அமைப்புகள். ஒரிஜினல் ஏழு உலக அதிசயங்களில், இன்று நாம் காணக் கிடைக்கும் ஒரே அதிசயம் பிரமிட்கள்தாம்.

இதுவரை கண்டறியப்பட்ட எகிப்து பிரமிடுகளிலேயே கிங்குபுவின் பிரமிடு மிகப்பெரிய அளவிலானது. இதன் உயரம் 146 மீற்றர் (கிட்டத்தட்ட 500அடி). கிட்டத்தட்ட 4, 600 வருடங்களுக்கு முன்னர் இது கட்டப்பட்டதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் ஒரு சுவாரசியம் என்னவென்றால் முதன் முதலில் கட்டப்பட்டது கிரேட் பிரமிடு அல்ல. கிங் குபு வின் தந்தை கிங் ஸ்நெப்ருவினால் கட்டப்பட்ட ஸ்டெப் பிரமிடுதான் முதன் முதலில் கட்டப்பட்ட பிரமிடாகும். கிரேட் பிரமிடு 23 லட்சம் எண்ணிக்கையிலான கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இவற்றின் மொத்த எடை 59 லட்சம் தொன்.

கிஸா (Giza) நகரில் இருக்கும் பெரிய பிரமிட் சுமார் 476 அடி உயரமானது, 13.6 ஏக்கர் நிலப் பரப்பு கொண்டது 5,90,712 கற்கள் பயன்படுத்தப்படுகின்றன என கம்ப்யூட்டர் கணக்கீடுகள் சொல்கின்றன. கற்களின் எடை ஒவ்வொன்றும் இரண்டில் இருந்து முப்பது தொன் வரை. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இந்தப் பிரமிடுகளைச் சுற்றி எந்தவிதமான மலைகளோ, பாறைகளோ, கற்குன்று களோ கிடையாது. நகரத்தின் அருகில் மட்டுமல்ல, தொலைவிலும் கூட இல்லை. ஒரு புறம் பாலைவன மும், மறுபுறம் கடலும் தான் இந்நகரைச் சுற்றி உள்ளது. அப்படியானால் இந்தப் பிரமிடை எப்படி உருவாக்கியிருப் பார்கள், இத்தனை லட்சம் கற்களை எங்கிருந்து கொண்டு வந்திருப்பார்கள், இவ்வளவு பெரிய உயரத்திற்கு அவற்றை எப்படி எழுப்பியிருப்பார்கள் என்றுதான் வரலாற்றாய்வாளர்களும், விஞ்ஞானிகளும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

# பேய் இருக்கா இல்லையா.!?

பேய் இருப்பதும், இல்லாததும் ஒருவரின் நினைப்பை பொறுத்தது ஆகும். அதிநவீன தொழில் நுட்ப யுகத்திலும் பேய் இருக்கின்றதா, இல்லையா என்ற கேள்விக்கு தெளிவான பதில் யாராலும் கூற முடியவில்லை. எந்தக் கருவியும் இதனை நிரூபிக்கவும் இல்லை.

இத்தகை சர்ச்சைக்குரிய கேள்விக்குப் பதில் உள்ளது என்றும் இதனை விளக்கும் சில தகவல்கள்.

பேய் இருப்பது குறித்து பல்வேறு ஆய்வாளர்கள், வல்லுநர்களின் கருத்துகளுக்கு அவர்களுக்குள் ஏற்பட்ட வேறுபாடுகளை தவிர இதனை நிரூபிக்கவோ அல்லது நிராகரிக்கவோ எவ்வித சான்று மற்றும் விளக்கம் என எதுவுமே இன்று வரை கிடைக்கப்பெறவில்லை.

இன்னும் சிலர் பேய் இருப்பதை நிரூபிக்கவே முடியாது என்றும், இல்லாத விடயத்தை நிரூபிக்க முடியாது என்றே கூறுகின்றனர். இருந்தும் இயற்கைக்கு மாறானவற்றை நிரூபணம் செய்ய முடியாது என்ற கருத்தும் நிலவுகின்றது.

உண்மையில் பேய்கள் இருக்கின்றனவா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள அதி நவீன கருவிகளை பயன்படுத்தி பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களும் தீவிர ஆய்வில் ஈடுப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பேய் சார்ந்த நம்பிக்கை ஏதும் கிடையாது.

இன்று வரை தொடரும் ஆய்வுகளில் உறுதியான முடிவு எட்டப்படாத சூழல் தான் நிலவுகின்றது. எனினும் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பேய் இருப்பது குறித்த முடிவு விரைவில் எட்டப்படலாம்.

பேய் இருப்பதைப் போன்று காட்சியளிக்கும் பல்வேறு படங்கள் இணையம் முழுக்க பரவிக்கிடக்கின்றன. இதன் முக்கிய அம்சம் இவை போட்டோப் அல்லது போட்டோ எடிட் செய்யும் முறைகள் கண்டறியப்படும் முன்பே எடுக்கப்பட்டவை ஆகும். இவை எடுக்கப்பட்ட நேரங்களில் குறிப்பிட்ட இடத்தில் இல்லாமல், படம் டெவலப் செய்த பின் அதில் மர்ம உருவம் கண்டறியப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேய் இருப்பதாகக் கூறப்படும் படங்களில் பல்வேறு போலி படங்கள் இடம் பெற்றிருந்தாலும், சில படங்களில் மர்ம உருவம் எவ்வாறு பதிவானது என்பது இன்று வரை கேள்விக்குறியாகவே இருக்கின்றது.



ஆய்வாளர் நெய்கெல் கீநேல் மற்றும் அவரது குழுவினர் பேய்கள் இருக்கின்றமை குறித்த தங்களது ஆய்வினை பேய் இருப்பதாக கூறப்பட்ட பழைய கட்டடத்தில் தங்கியிருந்து தொடங்கினர். ஆய்வினை தொடங்கயோதோடு பேய் குறித்த கோட்பாடு ஒன் றையும் இயற்றினர்.

தங்களது கோட்பாடுகளில் மர்ம உருவங்கள் மற்றும் பேய்களை அவர்கள் ரெசிடூயல் ஹான்டிங் என்றும் இவை ஆவிகள் கிடையாது இவை மக்களுக்கு தீங்கு விளைவிக்காது என்றும் குறிப்பிட்டுள்ளனர். உண்மையான ஸ்டோன் டப் கோட்பாட்டினை தழுவி உருவான தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மனிதன் உச்சக்கட்ட கோபத்தில் இருக்கும் போது உடலில் இருந்து வெளிப்படும் அதீத சக்தியினை வெளியில் இருக்கும் உயிரற்ற பொருள்கள் கவர்ந்து கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல நரம்பியல் மனநல மருத்துவரான பீட் டர் பென்விக் மனநலம் சார்ந்த பிரிவில் பல ஆண்டுகள் அனுபவம் கொண்டவர் ஆவார். இவர் எழுதிய த ஆர்ட் ஆப் டையிங் என்ற புத்தகத்தில் நம் உடலில் இருக்கும் மூளை மற்றும் மனது இரண்டும் தனித்தனியே வேலை செய்யும், நாம் இறந்ததும் அவை இரண்டும் சம்பந்தமே இல்லா மல் பிரிந்து விடும் என குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 300க்கும் அதிகமான நோயாளிகளின் மரணிக்கும் அனுபவங்களை ஆய்வு செய்த பீட்டர் அவர்களிடம் ஒரே மாதிரியான உணர்வுகள் இருந்ததை மட்டுமே உணர்ந்தார்.

# கல்விக்கதிர்



- அகரன் -

## நுளம்புகள் பற்றி தெரிந்ததும் தெரியாததும்

உலகத்திலேயே மிக ஆபத்தான பூச்சி எது? என்று பார்த் தால் நாம் நினைப்பது போன்று அமேசன் காடுகளிலோ அல்லது ஆப்பிரிக்க காடுகளிலோ இருக்கும் ஒரு இனம் தெரியாத ஜந்து அல்ல. நம்மைச் சுற்றி இருக்கும் நாம் அறிந்த நுளம்பு தான். உலகிலேயே மிக ஆபத்தான பூச்சியாகும். மலேரியா, டெங்கு, மஞ்சள் காமாலை காய்ச்சல், மேற்கு நைல் வைரஸ் போன்ற எண்ணிலடங்காத நோய்கள் பரவுவதற்கு இந்த நுளம்புகள் காரணமாக அமைகின்றன. வருடா வருடம் லட்சக்கணக்கான மக்களின் இறப்பிற்கு இந்த நுளம்புகள் காரணமாக இருக்கின்றன. கற்காலம் முதல் இன்றுவரை உலகில் வாழ்ந்த மனிதர்களில் 50% ஆனவர்களின் இறப்பிற்கு நுளம்புகள் காரணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

1.பெண் நுளம்புகள் மாத்திரமே மனிதரையும் விலங்குக ளையும் கடிக்கும். ஆண் நுளம்புகள் பூக்களில் இருந்து உணவைப்பெற்றுக்கொள்ளும்.

2.இது அனைவருக்கும் தெரிந்த விசயம். ஆனால், பெண் நுளம்புகள் மனிதரை தாக்குவதற்கான காரணம் தமது இனப் பெருக்க முட்டைக்குத் தேவையான புரதத்தை (protein) பெற் றுக்கொள்வதற்காகவே.

3. சில இடங்களில் இருக்கும் நுளம்புகள் மனிதரை கடிப்பதே இல்லை (பெண் நுளம்புகளாக இருந்தாலும்) அவை விலங்குகள் மற்றும் பறவைகளை மட்டுமே கடிக்கின்றன.

4. நுளம்புகள்மணிக்கு 1.5 — 2 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும்.

5. இது ஏனைய பூச்சிவகைகளுடன் ஒப்பிட்டால் மிகவும் மந்தமானது. போட்டி வைத்தால் நுளம்புகள் கடைசியாகவே வரும்.

6. ஒரு செக்கனிற்கு 300 — 600 தடவைகள் தமது இறக் கைகளை அடிக்கும்.

7. இதன் விளைவாகவே உங்கள் தலைப்பகுதியை நுளம்பு அண்டும் போது ஒரு வித ஒலி ஏற்படுகின்றது.

8. பொதுவாக வீடுகளை அண்டியே நுளம்புகள் வாழும். ஆனால் சிலவகை நுளம்புகள் 160 கிலோமீற்றர் தூரத்தில் கூட தமது இனப்பெருக்கத்தை நடத்தும். (நீரிலேயே தமது முட்டைகளை இடும்)

9. டைனோசர் காலத்தில் இருந்தே நுளம்புகள் இருந்து வந்துள்ளதாக விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். தென் ஆபிரிக்க கண்டத்தில் உருவாகி உலகம் முழுவதும் பரந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

10. நுளம்புகள் கடித்து இரத்தத்தை உறிஞ்ச முதல் சிறிய அளவில் சிறு நீரை கழிக்கின்றன. சில வேளைகளில் கடித்த இடத்தை சுற்றி ஈரமாக இருப்பதை உணர முடியும்.

11. நுளம்புகள் ஆண்களை விட பெண்களையே அதிகம் கடிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றன.

12.பண்டைய நுளம்புகள் தற்போது இருக்கும் நுளம்புகளை விட 3 மடங்கு உருவில் பெரியது.

13.75 அடி தூரத்தில் இருக்கும் ஒரு மனிதரை சரியாக இனங்கண்டு கடிக்கும் மோப்ப சக்தி நுளம்புகளுக்கு உண்டு.

14.ஒரு நுளம்பு 5 — 6 மாத காலம் வரை வாழும் தகுதியுள்ளது.


15.நுளம்புகள் 6 கால்களை உடையன.

16.ஒரு நுளம்பின் சாதாரண நீளம் 16 மில்லிமீட்டர்களாக இருக்கும்.

17.2, 700 — 3, 500 வகையான நுளம்புகள் உலகம் பூராவும் இருக்கின்றன.

# சிவசேகரம் கவிதைகள்

## அறிமுகக் குறிப்பு




சமூக இயல் பதிப்பகச் செயற்பாட்டாளர் பௌசர் அவர்களது முன் முயற்சியில், சி. சிவசேகரம் அவர்களின் வெவ்வேறு கவிதை நூல்களின் கவிதைகள் அனைத்தும் திரட்டப்பட்டு 'சிவசேகரம் கவிதைகள்' என்னும் 'திரட்டு நூல்' உருவாக்கப்பட்டிருக்கிறது.

நேர்த்தியான வடிவமைப்புடன் கெட்டி அட்டைப் பதிப்பாக வெளிவந்துள்ள இந்த நூலானது, கவிதை ஆர்வலர்களுக்கும் கலை விமர்சகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படக்கூடியது. ஒரு படைப்பாளரின் அனைத்துப் படைப்புகளையும் அவர் வாழும் காலத்திலேயே ஒரே தளத்திற் கிடைக்கச் செய்வது, அவசியமான அரிய பணியாகும். தமிழகச் சூழலில் இத்தகைய முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஈழச் சூழலில் நடைபெறுவது அரிது. (சு.வில்வரத்தினம் அவர்களது கவிதைகள், திரட்டு நூலாக முன்னர் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.)

சிவசேகரம், ஈழத்தின் கவிதைப் பரப்பில் நான்கு தசாப்தங்களைக் கடந்து கணிசமான பங்களிப்பைச் செய்திருப்பவர். கல்வியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த அவரது பங்களிப்புகள் மிகவும் முக்கியமானவை. கவிதைத் தொகுதிகள் உள்ளடங்கலாக, அவரது 32 பல்துறை சார் நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன.

சிவசேகரம் எழுதியுள்ள பெரும்பாலான 'கவிதைகள்', அரசியல் மற்றும் சமூகவியல் சார்ந்த 'நேரடி' எடுத்துரைப்புகளாக அமைந்திருக்கின்றன.

அவை, அறிவுபூர்வ உரையாடலுக்கான தூண்டிகளாகத் தொழிற்படக்கூடியவை. வலிந்து புனையப்பட்ட வார்த்தைக் குவியல்களாக, வெற்றுக் கோஷங்களாக எஞ்சிவிடக்கூடிய ஆபத்தையும் அவை கொண்டிருக்கின்றன.

இத்தகைய கவிதையாக்க முறைமையானது, அழகியல் ரீதியில் நலிவடைந்து உணர்வுபூர்வ நெருக்கத்தையும் அனுபவ தரிசனங்களையும் பெரும்பாலும் அழுத்தமாக நிகழ்த்தத் தவறிவிடுகிறது என்பது கவிதையியல் சார்ந்த ஒரு விமர்சனக் கண்ணோட்டமாக இருந்து வருகிறது.

எது எப்படியிருந்தாலும், கவிதைக் கலை குறித்த விமர்சனபூர்வ அணுகுமுறையானது பன்முகத் தன்மை கொண்டமைவது அவசியமானது.

இதுவரை சிவசேகரம் எழுதியுள்ள கவிதைகளை மீள்வாசிப்புச் செய்யவும் விமர்சனபூர்வமாக அணுகவும் ஏற்ற முறையில் இந்தத் திரட்டு நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது. சமூக இயல் பதிப்பகம் வாயிலாக இதனைத் தமிழ்ச் சூழலுக்கு வழங்கியிருக்கும் பௌசர் பாராட்டுக்குரியவர்.

இந்த நூலின் சில பிரதிகளை, நண்பர் பௌசர் அண்மையில் எனக்கு அனுப்பியிருந்தார். இந்த நூலாக்கத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

**- அமரதாஸ் -**

# கனவுக் கதிர்



## மரணம்

உயிர் கரையும் கணமொன்றில்
அல்லது
உணர்வு அறுத்தெறியப்பட்ட
பொழுதொன்றில்
கனிந்த பழமொன்று
காம்பில் இருந்து கழன்று விழுவது போல
என் மீது அது விழுதல் கூடும்
யார்யாருக்கோ வாழ்ந்து முடித்த
காலத்தின் பிரமாண்ட மாளிகையில்
எனக்காய் வாழ நினைத்த
ஏதேனும் நொடிகள்
இருள் மூலைக்குளிருந்து
தலையெடுத்துப் பார்க்கும் ஒரு
கணமாய் அது
மாறுதலும் கூடும்
வெண்சக்கரம் பூட்டப்பட்ட
இரதமேறி மேகங்களிடையே
அழைத்துச் செல்ல
முன்னோர்கள் பலரும்
விரைந்தோடி வருதலும் கூடும்
எல்லாச் சிரிப்பொலிகளும்
அடங்கிப்போன
அறையொன்றிலோ
பெருவெளியொன்றிலோ
என்னை அது தழுவிடல் கூடும்
நானற்றதான வாழ்வை
நினைத்துப் பார்க்கவே அஞ்சும்
உணர்வுடன் யாருமற்றதாகவே இருப்பது
எத்தகு விடுதலை அது
எண்ணற்ற முகங்களைக் கடந்து வந்த
நீண்ட பயணத்தில்
இறுதித் தரிப்பிடத்தில்
யாருக்கு மானசீகமாய் கையசைத்து
இறங்கப் போகின்றேன் ?
மெல்ல மூடும் இமைகளுக்குள்
யாருமேயில்லாத கொடுமிருட்டு
நிரப்புதலும் கூடும்
என்றோ ஒரு நாள்
உங்களில் யாரேனும்
தொண்டை வழியே துயரிறங்க
குரலடைத்து எனக்காய்
ஒரு விம்மல் விம்மினால்
இன்றே நன்றி
ஒரு முன்வாழ்த்துப் போல

**திருக்கோவில் கவியுவன்**

## நாட்டில் இன்று

எங்கும் அவலத்தின் ஓலம்
பொங்கும் கண்ணீரில்
அலை அலையாய்ச் சோகம்
மக்கள் வீதியில்
மனங்கள் பீதியில்
அத்தியாவசிய வரிசைகள்
அள்ளிக் கொடுக்கும்
இன்னல்களோ
சொல்லில் அடங்காதவை

இலங்கைத் தீவினை
இழையோடிய வறுமையால்
கலகங்கள் வலுவாய்
கதிரென உதித்தன

உணவுடன் நீரும்
உறக்கமும் நிம்மதியும்
தொலைத்த பாவிகளாய்

தேவைகள் தீர்த்திட
ஏங்கி நிற்கும் அவலம்
பாவைகளாய் மனித
வாழ்வை மாற்றிய சாபம்

என்று மாறும் இந்த
வாழ்வியல் அவலம்?
என்று வீழும் இந்த
விலைவாசி ஏற்றம்?

**- குகதா -**

## எட்டாத நிலவுக்கே எத்தனை ஏச்சுக்கள்

அவளும் ஒரு அழகிய நிலவுதான்
எல்லா கண்களும் முதல் காணும்
கறுப்புப் படலங்கள் போல்
இவள் என்னதான் ஒளி வீசினாலும்
கண்கள் கறுப்புப் படலங்களைத்தான்
காணத்துடித்துக் கொண்டிருக்கின்றதோ என்னவோ
அவளுக்கு தெரிந்ததெல்லாமே
மென்மை ஒளியும் மின்னும் அழகும்தான்
மேகங்கள் ஓடும்போது
மறைந்தும், தெரிந்தும்,
ஒளிந்தும் வாழும்
அவள் ஒரே நிலையில் தான்
இருக்கின்றாள் என்பது
யாரும் உணரப்போவது இல்லை
இயற்கை நியதியில்
பூகோள விதிகளுக்கு ஒத்து ஓடிக்கொண்டு
புதுமை புரிய,அவள் முழுமை காட்ட
மாற்றங்களின் வழித்தடத்தில்
பிறைகளாகின்றாள்
வில்லாகி விட்டமாகி
வெளிப்படும் வடிவில்
வேறானால் என்ன
வெளிச்சம் தர மறுப்பதில்லை
அந்த வெண்நிலவு.
சொன்னாலும் சொல்லாது விடினும்
பார்ப்பவர்களுக்கு தேய்நிலவவள்
பலர் விமர்சனத்தில் தித்திப்பாகிறாள்
அவளுக்கு மட்டுமே தெரியும் எண்ணி
ஐந்து மூன்று நாளில் முழுமையாவாள்
தான் பூரணியாய் பூரணமாவாள் என்று
புரிவார்க்கு புரியும் புதிர்
தெரிவார்க்கு தெரியும் விடை
நகைப்பவர் நகைக்கட்டும்
நதி இலக்கில் ஓடுவதை
இயற்கையும் இறைவனும்
இடைநிறுத்தப் போவதில்லை

**நிரப்பியா.ச**

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# புன்னகை முகம்

நல்ல சிந்தனைகளே இல்லாமல் ஆலய வழிபாடு செய்து பயன் ஏதும் இல்லை. எளியவர்க்கு இரங்கும் போது நமது பிரார்த்தனை தானாகவே நிறைவேறுகிறது. மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் உதவி செய்யும் போது வாழ்க்கை நம் தேவைகளை தானாகவே நிறைவேற்றி விடும். சிடு மூஞ்சித்தனமாக இருப்பவர்களை யாருக்கும் பிடிப்பதில்லை. புன்னகைக்க விலை ஏதுமில்லை தானே? உள்ளத்தில் அன்பு மலரும் போது தான் புன்னகை முகத்தில் மலரும். கிடைத்த வாழ்க்கையை அழகாக வாழாமல் வெற்றுப் புலம்பல்களோடே வாழ்வதல்ல வாழ்க்கை. பழைய நினைவலைகளை யோசிக்கும் போது அதில் உள்ள சோகங்களை மட்டுமே அசை போடாமல் நல்ல நிகழ்வுகளையும் அசை போடுங்கள். இன்முகத்துடன் ரசித்து ருசித்து வாழ்வதே சிறப்பு. ஒரு நாள் தான் வாழ்க்கை என்று தெரிந்த போதும் மலரும் பூக்கள் போல சிரித்துக் கொண்டே வாழலாம். சிறிய செயல்களையும் சிறப்பாகச்செய்ய வேண்டும் என்ற ஆர்வமிருந்தாலே போதும் ஆத்மார்த்தமான ஈடுபாடு அச்செயலை அழகாக்கும்.




# பாராட்டுங்கள்

பாராட்டுங்கள்... பாராட்டப்படுவீர்கள். நல்ல மனுஷன்.... இருக்கும் வரை எல்லோருக்கும் நல்லது செய்துவிட்டு போய்விட்டார்... ‘இறந்து போன மனிதரின் ஊர்வலத்தில் பேசிக் கொண்டே செல்லும் மனிதர்கள்...இந்த வார்த்தைகளை அவர் இருக்கும் போதே பாராட்டியிருக்கலாமே? உள்ளுக்குள் பூட்டி வைக்கும் வார்த்தைகளை யார் அறிவது? மனதை இலகுவாக்கும் நட்புகளை நாடாமல் உரையாடல்களற்ற இணையங்களுக்குள் இணைந்து கொள்கிறோம். வார்த்தைகளே இல்லாமல் போகும் போது வாக்கியங்களை உருவாக்குவது சாத்தியமாகாது. எங்கும் மௌனமும் வெறுமையும் நிரம்பிக் கிடக்கிறது. பாட்டியைப் பார்ப்பதற்காக கிராமத்திற்குப் போன குடும்பம் பாட்டியை நடுவில் உட்கார வைத்து விட்டு அலை பேசியில் மூழ்கிக் கிடக்கும் தலைமுறையை உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம்.

நம் சக்தியைத் தேவையில்லாமல் வீணடிக்கும் விடயங்களில் நம்மைத் தொலைக்க வேண்டாம். வாழ்க்கை ஒரு திரு விழா. அதை உற்சாகமாக கொண்டாடுவோம். வாழ்தலை அழகாக்குவோம்.



# சிரித்துக் கொண்டே வாழலாம்

என்ன பெரிய இடர், ஆபத்து! ஒருகை பார்க்கிறேன் என்று வாகனங்கள் பறக்கும் சாலையின் நட்டநடுவே சென்று நின்றுகொண்டால் என்னாவது? உயிர் இருந்தால் உடம்பில் கையோ காலோ இருக்கிறதா? என்று பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

கட்டடத்தில் தீப்பற்றிக் கொள்கிறது தீ கடுமையாய்ப் பரவிக் கிடக்க வாசல் வழியாக வெளியேற வாய்ப்பில்லை அப்பொழுது இரண்டாவது மாடியில் இருப்பவர் என்ன செய்வார்? கைகால் உடைந்துவிடும் என்றெல்லாம் தயங்கப் போவதில்லை. கண்ணை மூடிக்கொண்டு குதித்து விடுவார்.

இங்கு உயிர் முக்கியம். எனவே ஆபத்தைக் கடக்க உள்ள ஒரு வாய்ப்பைப் பயன்படுத்தியே ஆகவேண்டும். அதற்காக லிஃப்ட் இயங்கவில்லை என்பதற்காக மாடியிலிருந்து குதித்தால்?

சில சாதனைகளுக்காக, குறிக்கோளுக்காக, முன்னேற்றத்திற்காக மேற்கொள்ள வேண்டிய செயல்களுக்கு இடர்கள் ஏற்படுமே என்று பயந்து, சுணங்கிப் போகாமல், செயலற்றவராய் இல்லாமல் செய்ய வேண்டிய செயல்களை, செய்து முடிக்கவேண்டும். முழுக்கமுழுக்கப் பாதுகாப்பும் அபாயமற்ற நிலையும் கவலையற்ற வாழ்வும் என்பதெல்லாம்எவரொருவருக்கும்இவ்வுலகில் அமைந்திருக்கவில்லை என்பதை உணர்ந்து நாம் இடர்களை எதிர்கொள்ள வேண்டும்.

உழைப்புக்கேற்ற பலன். அதைப் போல் துன்பம் சுமந்து, இடர்களை எதிர்கொண்டு செயலாற்றி முடிக்கும் போது கிடைக்கிறதே நிறைவு அது பலன். மகிழ்வளிக்கும் பலன்.

இலாபம் ஈட்ட வேண்டும் என்று தான் தொழில் தொடங்குகிறோம். நட்டமும் ஏற்படலாம். அதற்காக நட்டம் ஏற்பட்டால் என்ன செய்வது என்று நான் தொழிலே செய்வதில்லை என்று ஒருவர் சொன்னால் என்ன நினைப்பீர்கள்?

தொழிலில் ஏற்படும் இடர்களை எதிர்கொண்டால் தானே லாபம். கட்டிலில் இழுத்துப் போர்த்திப் படுத்துக் கொண்டால் பணியாற்றும் ஊழியர்களா இலாபம் ஈட்டி நம் காலடியில் வைத்துவிட்டுச் செல்வார்கள்?

வாழ்க்கையை இரண்டுவிதமாக வாழலாம். பிறந்து விட்டோம், வாழ்ந்து கிடப்போம் என்பது ஒரு வகை. அடுத்தது ஓர் உன்னதக் குறிக்கோளுடன் உண்மையிலேயே வாழ்வது.


‘என்னவோ ’ என்று வாழ்வதில் சுவையுமில்லை, மகிழ்வுமில்லை. அது அஃறிணை வாழ்க்கை.

தோல்வி அடைபவர்களைவிட, சாதனை புரிபவர்கள்தாம் அதிகம் இடர்களை எதிர்கொள்கிறார்கள். அதிகப்படியாய் இன்னல்களை எதிர்கொள்பவரால்தான் அதிகமான சாதனைகள் புரிய முடிகிறது.

ஒருவர் வரலாற்றில் இடம் பெறுவது அவர் புரிந்த சாதனையினால்தானே தவிர அவர் அதுவரை பட்ட துன்பத்தினால் அன்று. எடிசனை நாம் அறிந்து கொள்வது அவர் கண்டுபிடித்த லைட் பல்பிற்காகத்தானே தவிர அவர் ஆயிரம்முறை அடைந்த தோல்விகளினால் அல்ல.

மொத்தத்தில், தெருவைக் கடப்பதிலிருந்து, இல்வாழ்க்கை அமைத்துக் கொள்வதிலிருந்து, ஹோட்டலில் பூரி கிழங்கு உண்பதிலிருந்து – அனைத்திலும் இடருண்டு ஆபத்துண்டு. அதையெல்லாம் எதிர்கொண்டு வாழ்ந்து நமது இலட்சியத்தையோ குறிக்கோளையோ அடைவதில்தான் சாதனை உள்ளது மனதிற்கு நிறைவான மகிழ்வும் உள்ளது.

# இனிமையான இடர் என்று ஏதாவது உள்ளதா?



வாழ்க்கையில் நம் குறிக்கோளை எட்டுவதற்கு இடர்களைக் கடக்க வேண்டியது தவிர்க்க முடியாதது. இடரற்ற வாழ்க்கை என்பதே இல்லை. இந்த இடர்களோ எப்பொழுதுமே நம் மன மகிழ்வைக் குறிவைப்பவை. இனிமையான இடர் என்று ஏதாவது உள்ளதா என்ன?

எல்லாமே கஷ்டம், அசௌகரியம், உளைச்சல், அலைச்சல் இத்தியாதி. நான் எந்தவொரு இடரையும் ஏற்க முடியாது. நான் நினைத்தது அப்படியே நடக்க வேண்டும் என்று யாராவது நினைத்தால் என்னவாகும்? ஒன்றும் ஆகாது. அவர் நினைத்த குறிக்கோள் ‘வேலைக் காவாது’. இப்புவியின் விதியானது ‘இடருக்குப் பிறகே வெகுமதி’. குழந்தைகள் ஒரு செயல் புரிய அதுசார்ந்த இடர், துன்பம், அபாயம் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. குழந்தைகளாய் இருக்கும்போது நினைத்ததை அடைய எந்தவித இடரையும் யோசிக்காமல் கொள்ளாமல் எதிர்கொள்ளும். நாம் வளர வளர மாறிப் போகிறோம். இடித்துக் கொள்வோம், விழுந்து விடுவோம் என்றெல்லாம் தயங்காமல் தட்டுத் தடுமாறி நடை பழகிக்கொள்ளவில்லை? ஆனால் பெரியவர்களாக ஆனதும் அடுத்த அடி எடுத்துவைக்க யோசிக்கிறோம். எச்சரிக்கையும் பாதுகாப்புணர்வும் மிகவும் மேலோங்கி விடுகிறது. கையில் ரிமோட்டைத் தூக்கி வைத்துக் கொண்டு சனல் மாற்றிச் சனல் பார்த்து ரசித்துவிட்டு நமது வாழ்க்கை அப்படியே எழுதிவைத்த திரைக்காட்சி போல் ஒரே சீராய் ஓடவேண்டும் என்று விரும்புகிறோம்.

இங்கு இடர்கள் என்றால் என்ன என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். வலியச் சென்று துன்பத்தை விலைக்கு வாங்குவதன்று இடர். வயதிற்கேற்ற பக்குவமும் எச்சரிக்கையும் இயற்கை. காரியங்களை விட்டு ஒதுங்கப் பாதுகாப்புணர்வு அவசியம்,



# வரகரிசியின் பயன்கள்

வரகில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள் - புரதச்சத்து, சர்க்கரை, கொழுப்பு, கனியுப்புக்கள், கொழுப்புச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச் சத்து, தையமின், நயஸின் போன்ற சத்துக்கள் வரகில் மிகுதியாக உள்ளன.

வரகரிசி உண்ணுவதனால் சிறுநீரகத்தின் செயல்பாடு மேம்படும். கோடைகாலங்களில் வரகரிசியில் செய்யப்படும் உணவுகளை அதிகம் சாப்பிடுவதால் தாகம் தணிவதோடு, சிறுநீரகங்களில் கற்கள் ஏற்படுவதை தடுக்கும். சிறுநீரகங்கள் சிறுநீர் வழியாக உடலின் நச்சுகள் அனைத்தையும் வெளியேற்றச் செய்யும். சிறுநீரகங்களின் செயல்பாடுகளையும் மேம்படுத்தும்.

**இதய ஆரோக்கியம் மேம்படும்**

இதயம் சீராக இயங்குவதற்கு வரகரிசி சிறந்தது . இதயத்திற்கு பலம் தரும் தன்மை அதிகம் கொண்டது. வரகரிசி உணவுகளை சாப்பிட்டு வந்தால் இதய ஆரோக்கியம் மேம்படும்.

**இரத்தம் சுத்தமடையும்**

வரகரிசியை சாப்பிடுவதால் இரத்தத்தில் ஊட்டச்சத்துகள் அதிகரிக்கும். இது இரத்தத்தை தூய்மைப்படுத்துவதோடு, இரத்த ஓட்டத்தையும் சீராக்கும். எனவே இரத்தம் சுத்தமாக இருக்க வேண்டுமானால் வரகரிசி மூலம் செய்யப்படும் உணவுகளைச் சாப்பிடுவது மிகவும் நல்லது.

**ஆண்மை குறைபாடுகள் நீங்கும்**

இன்றைய காலகட்டத்தில் ஆண்கள் பலருக்கும் வேலைச் சுமை, குடும்ப பிரச்சினை காரணமாக மன அழுத்தம் மற்றும் கவலைகள் அதிகம் ஏற்படுகின்றன. அதிக மனஅழுத்தம், கவலை காரணமாக ஆண்மை குறைபாடு ஏற்படுகிறது. இவர்கள் வரகரிசியை சாப்பிடுவதன் மூலம் ஆண்மை குறைபாட்டை போக்க முடியும்.

**மலச்சிக்கலை போக்கும்**

வரகரிசி கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சாப்பிடுவதால் வயிறு, குடல்களில் இருக்கும் புண்கள் ஆறுவதோடு, மலச்சிக்கல் பிரச்சினையும் நீங்கும். ஏனெனில் இதில் நார்ச்சத்து மிகவும் அதிகம்.

**அபரிமிதமான ஊட்டச்சத்து நிறைந்தது**

நமது உடல்நிலை நன்றாக இருக்க நமக்கு தேவையான அளவு தாது உப்புக்கள், இரும்புச் சத்து, விற்றமின்கள், சுண்ணாம்பு சத்து, பொஸ்பரஸ், கல்சியம் சத்துக்கள் போன்றவை மிகவும் அத்தியாவசியமாகும். இந்த சத்துக்கள் யாவும் வரகரிசியில் நிறைந்துள்ளன. வரகரிசி பயன்படுத்தி செய்யப்பட்ட உணவுகளை சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் அனைத்தும் குறைவின்றி கிடைக்கும்.

**உடல் எடையை குறைக்கும்**

இன்றைய காலத்தில் பலரும் உடல் எடை அதிகரிப்பால் அவதிப்பட்டு வருகின்றனர். உடல் எடையை குறைக்க நார்ச்சத்து அதிகம் கொண்ட, கொழுப்பை கரைக்கக்கூடிய உணவுப் பொருள்களை சாப்பிடுவது அவசியம். வரகரிசியில் இத்தகைய நார்ச் சத்து கொண்ட கொழுப்பை கரைக்கக்கூடிய சத்துக்கள் உள்ளன. வரகரிசி கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சாப்பிட்டு வந்தால் உடல் எடை விரைவில் குறையும்.

**நீரிழிவு நோய் கட்டுக்குள் வரும்**

நீரிழிவு நோயை கட்டுப்படுத்த நமது உடல் இயற்கையிலேயே இன்சுலினை சுரக்கும். வரகரிசி கொண்டு செய்யப்பட்ட உணவுகளை இரண்டு நாள்களுக்கு ஒரு முறை சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு வேகமாக குறைந்து நீரிழிவு நோய் கட்டுக்குள் வரும்.

உடலில் உள்ள தேவையற்ற நச்சுக்களை வெளியேற்றும் தன்மை வரகு அரிசிக்கு உண்டு. வரகை சரியாக தோல் நீக்கம் செய்யாவிட்டால், தொண்டையில் அடைத்துக் கொண்டு ஒருவிதமான அலர்ஜியை உண்டாகும்.

தற்போது பொதுவாக சிறுதானியங்களின் மேல் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுவதால், வரகின் பயன்பாடு அதிகரித்து கொண்டு வருகின்றது. சிறுதானியமான இதை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் பல்வேறு நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.

# வரகரிசி உளுந்தங்கஞ்சி



வரகரிசி - 100 கிராம்
தோலுடன் கூடிய உளுத்தம்பருப்பு - 25 கிராம்
வெந்தயம் - கால் தேக்கரண்டி
சீரகம் - கால் தேக்கரண்டி
முழுப்பூண்டு - 2
தேங்காய் துருவல் - அரை கப்
உப்பு - தேவையான அளவு

உளுத்தம் பருப்பை கல் நீக்கி, கொதிக்கும் நீரில் போடவும். சற்று நேரம் ஆகி பாதி வெந்ததும் வரகரிசியை கல் நீக்கி சேர்க்கவும். அத்துடன் உரித்த பூண்டு, சீரகம், வெந்தயம் ஆகியவற்றை சேர்க்கவும். பின்னர் தேங்காய் துருவல் சேர்க்கவும். நன்கு வெந்ததும் உப்பு சேர்த்து இறக்கவும்.

இதை கூழ்ப்பதமாக கஞ்சியாக வைத்து எள்ளுத்துவையல் வைத்தும் சாப்பிடலாம். அல்லது சோறு போல வைத்து மீன் குழம்பு சேர்த்தும் சாப்பிடலாம். இரண்டும் ஆரோக்கியத்தை தரும் .




# சூடை மீன் குழம்பு

சூடை மீன் – அரைக் கிலோ
துருவிய தேங்காய் – அரைக் கோப்பை
வெங்காயம் – இரண்டு
பச்சை மிளகாய் – நான்கு
பூண்டு – 5 பற்கள்
புளி – தேவையான அளவு
மிளகாய்த்தூள் – நான்கு தேக்கரண்டி
மல்லித்தூள் – இரண்டு தேக்கரண்டி
மஞ்சள்தூள் – அரைத் தேக்கரண்டி
கடுகு – ஒரு தேக்கரண்டி
மிளகு – அரைத்தேக்கரண்டி
சீரகம் – அரைத்தேக்கரண்டி
வெந்தயம் – அரைத்தேக்கரண்டி
கறிவேப்பிலை – இரண்டு நெட்டு
உப்பு – மூன்று தேக்கரண்டி
எண்ணெய் – தேவையான அளவு

மீனை சுத்தம் செய்து கொள்ளவும். தேங்காய் பூவுடன் அரை வெங்காயத்தை சேர்த்து மைய அரைத்துக்கொள்ளவும்.

புளியை இரண்டு கோப்பை தண்ணீரில் ஊற வைத்து நன்கு கரைத்து வடிகட்டிக் கொள்ளவும்.

பச்சைமிளகாய், பூண்டு ஆகியவற்றை நசுக்கி கொள்ளவும்.

அடி கனமான ஒரு சட்டியில் எண்ணெய்யை ஊற்றி சூடாகியதும் , கடுகு, சீரகம், மிளகு, வெந்தயம், கறிவேப்பிலை ஆகியவற்றை போட்டு தாளிக்கவும். பிறகு நறுக்கிய வெங்காயத்துடன், நசுக்கி வைத்ததையும் சேர்த்துப் போட்டு வதக்கவேண்டும்.

பிறகு உப்புத்தூள், மல்லித்தூள், மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் என அனைத்துதூள்களையும் போட்டு நன்கு பிரட்டிவிடவும்.

சற்று வதங்கியவுடன் அரைத்து வைத்துள்ள தேங்காய் விழுதை சேர்க்கவும்.

அத்துடன் கரைத்து வைத்துள்ள புளியுடன் ஒரு கோப்பை நீரைச் சேர்த்து நன்கு கொதிக்கவிடவும்.

குழம்பு சற்று கெட்டியானவுடன் நறுக்கி வைத்துள்ள மீன் துண்டுகளைப் போடவும்.

மீன் அவிந்தவுடன் அடுப்பிலிருந்து இறக்கி விடவும். சுவையான மீன் குழம்பு தயார்.

# மீன் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்



ஏனைய அசைவ உணவுகளை விட கடல் உணவான மீனில், நிறைவான கொழுப்பு உள்ளதால் இது உடல் எடையை அதிகரிக்காது. மேலும் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான ஒமேகா 3 உள்ளது. இதனால் உடலுக்கு நல்ல ஆற்றல் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், உணவுக்கட்டுப்பாட்டில் இருப்போருக்கு உகந்த ஒன்றாகும்.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் மீன் சாப்பிடுவதால் இதய நோய்கள் குணமாகும் என தெரியவந்துள்ளது. சிலவகை மீன்களில் அதிகளவில் ஒமேகா 3 நிறைந்துள்ளதால், இதனை சாப்பிடுமாறு மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

மீன் உணவு, மூளைக்கு சிறந்த உணவு என கூறப்படுகிறது, வாரத்திற்கு ஒருமுறையாவது உணவுடன் மீனை சேர்த்து கொள்வது நல்லது. மேலும், கண்பார்வை குறைபாடு, தைரொய்ட் பிரச்சினை உள்ளவர்கள் மீனை வாரத்திற்கு இருமுறையாவது எடுத்துக்கொள்வது நல்லது.

மீன் உணவு வகைகளை தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் வயதான பெண்களுக்கு ஏற்படும் இதயநோய் அபாயம் குறைகிறது. நினைவுத்திறன் குறைபாடு, நரம்புத்தளர்ச்சி நோய் போன்ற நோய்கள் குணமடையும்.

மீன் எண்ணெய்யை சாப்பிடுவதால், இரத்தத்தில் இருக்கும் கொலஸ்ட்ரோலின் அளவு குறையும். இந்த எண்ணெய் ஆரோக்கியத்தை தருவதோடு சருமம் நன்கு மென்மையாகவும் அழகாக பொலிவோடு இருக்கவும் உதவும்.

மனித மூளையின் பல்வேறு செயற்பாடுகளுக்கு அவசியத்தேவையாக இருக்கும் கொழுப்பு அமிலங்கள் மீன்களில் அதிக அளவு இருக்கின்றன. மன அழுத்த நோய் உருவாவதற்கு பல்வேறு காரணிகள் இருக்கின்றமையால், கூடுதலான மீன் உணவு சாப்பிட்டால் மன அழுத்த நோய் வராமல் தடுக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

# இலங்கையில் முதலில் யாழ். மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பிரமந்தனாறு இறை இரக்க பக்தி யாத்திரைத் தலம்

## அதன் பெருவிழாவில் யாழ் ஆயரின் குருத்துவ 48ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

**கிளிநொச்சி பிரமந்தனாறு இறை இரக்க யாத்திரைத்தலத்தின் 2022ஆம் ஆண்டுக்கான பெருவிழா ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் அவரின் குருத்துவ 48ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி காலைக்கதிர் தினசரிப் பத்திரிகை மற்றும் காலை, மாலை இணையத்தளப் பத்திரிகையின் ஞாயிறு தின கிறிஸ்தவ செய்தி இதழில் வெளிவரும் சிறப்பிதழ் இதுவாகும்.**

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -**
**(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)**





**கிளிநொச்சி பிரமந்தனாறு இறை இரக்க யாத்திரைத்தல பெருவிழா பற்றி பரிபாலகர் நிக்சன் கொளின்ஸ் அடிகளார்**

கிளிநொச்சி பிரமந்தனாறு இறை இரக்க யாத்திரைத்தல பரிபாலகரும் தர்மபுரம் பங்குத்தந்தையுமான நிக்சன் கொளின்ஸ் அடிகளார் காலைக்கதிர் பத்திரிகையின் ஞாயிறு தின கிறிஸ்தவ செய்தி இதழிற்குப் பின்வருமாறு தெரிவித்தார்:-

நான் 2021ஆம் ஆண்டு ஜனவரி 09ஆம் திகதி முதல் இந்தப் பங்கைப் பராமரித்து வருகிறேன். எனது பொறுப்பில் நடைபெறும் இரண்டாவது திருநாள் 24 ஏப்ரல் 2022 அன்று நடைபெறும். அன்றைய தின திருநாள் திருப்பலி யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுப்பார்.

அன்றைய தினம் ஆயர் அவர்களின் 48ஆவது குருத்துவ அபிசேக (1974) தினமாகும். அன்றைய திருப்பலியில் ஆயருக்கான விசேட வேண்டுதலும் வாழ்த்தும் இடம் பெறும். அவருக்கு பொன்னாடை போர்த்தி மாலையிட்டு கேக் வெட்டி நினைவுப் பரிசிலும் வழங்கப்படும்.

திருநாளுக்கு முன்னைய தினம் வேஸ்பர் நற்கருணை வழிபாட்டை யாழ் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி விரிவுரையாளரும் கிளிநொச்சி பிரமந்தனாறு இறை இரக்க யாத்திரைத்தல முன்னாள் பரிபாலகருமான ரீ.றவிராஜ் அடிகளார் நிகழ்த்த, திருப்பலியை யாழ்ப்பாணம் மறைமாவட்ட நிதி முகாமையாளர் நேசநாயகம் அடிகளார் ஒப்புக் கொடுப்பார்

திருப்பலி நிறைவில் ஆலயத்தில் புதியதாக கட்டி எழுப்பப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் குருக்களுக்கான தங்குமிட பணிமனை ஆலயத்தின் இருபுற விறாந்கைகள் என்பன ஆயரினால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்படும்.

2021ஆம் ஆண்டு நான் பங்கைப் பொறுப்பெடுத்தமை முதல் தவக்காலத்தில் ஒரு சனிக்கிழமை பங்கின் மற்றைய ஆலயங்களில் இருந்து மக்கள் யாத்திரையாக இறை இரக்க ஆலயத்திற்கு வரும் யாத்திரை ஒன்றை தொடக்கியிருக்கிறேன்.

இலங்கை மண்ணில் நடந்து முடிந்த கொடிய யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களுக்கு இல்லிடம் கொடுத்து பாதுகாத்தமை கிளிநொச்சி பிரமந்தனாறு இறை இரக்க ஆலயமாகும்.

எமது பங்கு மக்களைத் தவிர, போர் நடந்த போது அகதிகளாக இங்கு தஞ்சமடைந்த இறை மக்கள் பலர் இவ் விழாவில் கலந்து கொள்வர். கட்டைக்காடு, சுன்னாகம் போன்ற பங்கு மக்களும் இடம் பெயர்ந்து இங்கு வந்த பின்னர் எமது ஆலயத்தில் பற்றுக் கொண்டுள்ளனர்.

யாழ் மறைமாவட்ட மற்றும் இடங்களின் இறை இரக்க குழுவினர், அயல் பங்கு மக்கள், இந்து சமய சகோதரர்கள், புலம் பெயர்ந்த மக்கள் என எமக்குத் துணை புரியும் அனைவரையும் இந்த வேளையில் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன். - என்றார்.

**கிளிநொச்சி பிரமந்தனாறில் யாழ் மறைமாவட்டத்தின் முதல் இறைஇரக்க ஆலயம்**

வன்னி மண்ணின் வனப்பான கிராமங்களில் ஒன்று பிரமந்தனாறு. இக்கிராமத்தின் அழகிற்கு நெல்மணிகள் தலை நிமிர்ந்து அசைந்தாட, தாமரை மலர்கள் இதழ் விரித்து வளம் சேர்க்கின்றன. இக்கிராமத்தின் அழகிற்கு மேலும் அழகும் அருளும் சேர்த்து இறை பிரசன்னத்தை ஏற்படுத்தி நிற்கிறது பிரமந்தனாறு இறை இரக்க ஆலயம்.

யாழ் மறைமாவட்டத்தின் முதல் இறை இரக்க ஆலயம் கிளிநொச்சி பிரமந்தனாறில் 1993 ஆம் ஆண்டு பரந்தன் பங்குத்தந்தை ஏ.ஏவ்.பெனற் அடிகளார் மற்றும் வட்டக்கச்சி பங்குத்தந்தை ஞானரெட்டினம் அடிகளார் ஆகியோரின் ஒன்றிணைந்த ஆலோசனையில், ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் ஆண்டகையின் அனுமதியுடன், முல்லைத்தீவைச் சேர்ந்த அல்போன்ஸ் லிகோரி என்பவரால் அன்பளிப்பு செய்யப்பட்ட காணியில் கொட்டில் கோவில் அமைக்கப்பட்டு இறை இரக்க ஆண்டவர் படம் அரியணை ஏற்றப்பட்டது.

இறை இரக்க ஆண்டவர் படத்தினை அப்போதைய கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வராக இருந்த மறைந்த ஏ.எவ். பொனிபாஸ் அடிகளார் வழங்கினார். அக்காலத்தில் ஆலய அடிக்கல் நாட்டும் பணிக்கு பல காரணங்களுக்காகப் பல எதிர்ப்புகள் இருந்தபோது அவற்றை வெற்றி கொள்ள அயராது உழைத்த யூட் நிக்சன் அடிகளாரின் பணி மகத்தானது.

இந்து சமயப் பின்னணியில் இருந்து வந்த நாகமுத்து இயூஜின் சுப்பிரமணியம் என்பவர் ஆலய பொருளாளர் ஆக பணியாற்றியமையோடு இந்த ஆலயம் மட்டில் பெரிய கரிசனை எடுத்து அயராது பணியாற்றினார். அவரது இருதய ஒப்பரேசனுக்கு வைத்திருந்த 15 லட்சம் ரூபா அவரது இறப்பின் பின்னர் தற்போது அவரது மனைவி



யால் மணிக்கூட்டுக் கோபுரம் கட்ட வழங்கப்பட்டுள்ளது.

**நிரந்தர இறை இரக்க ஆலயத்திற்கான அடிக்கல்லை 2006ஆம் ஆண்டு ரீ.றவிராஜ் அடிகளார் நாட்டினார்**

2005ஆம் ஆண்டு ரீ.றவிராஜ் அடிகளார் பங்குப்பணிகளை பொறுப்பேற்ற பின்னர் உதவி அரசாங்க அதிபர் உதவியுடன் நிரந்தர இறை இரக்க ஆலயத்திற்கான அடிக்கல்லினை 2006 ஆம் ஆண்டு நாட்டினார்.

ரீ.றவிராஜ் அடிகளார் நிதி நிலைமை பற்றித் தெரிவிக்கும்போது -

ஆலயப் பணிகளை நாம் முன்னெடுத்த போது 22 லட்சம் ரூபா மட்டுமே எம்மிடம் இருந்தது. அப்போதைய ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இப்பணத்துடன் கோவில் கட்டமுடியுமா? எனத் தயங்கிய போது நீங்கள் உத்தரவு மட்டும் தாருங்கள், நாம் பணம் தேடுவோம் என்று பணியை ஆரம்பித்தோம்.

கனடாவில் பணியாற்றிய ரீ.தவராஜசிங்கம் அடிகளார்

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

மூலம் கனடா இறை இரக்கத்தினரிடம் இருந்து நிதி பெற்றோம். யாழ் மறைமாவட்டம் எமக்குபெரும் துணை புரிந்தது. றிக்கற்விற்பனை மூலம் ஒரு தொகைப்பணத்தை சேர்த்தோம். ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் பாதுகாவலன் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பாதுகாவலன் பத்திரிகை மூலம் இறை இரக்க ஆலயப் பணிகளுக்கு உதவும்படி வங்கிக் கணக்கையும் தெரிவித்து 15.03.2006 பாதுகாவலன் பத்திரிகையில் செய்தி மூலம் அழைப்பு விடுத்தேன். 01.07.2006 பாதுகாவலன் பத்திரிகையில் வெளியான செய்திப்படி கொழும்பு இறை இரக்கக் குழுவினர் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா வங்கி முலம் அனுப்பி வைத்தனர். நான் (ரீ.றவிராஜ் அடிகளார்) 15.07.2006 பாதுகாவலன் பத்திரிகையில் நன்றி தெரிவித்தேன்.

வின்சென்றைன் என்பவர் கொழும்பு பெற்றா கடைகளில் நிதி சேகரிக்கலாம் என்று ஆலோசனை உதவி செய்தார். ஒரு நாள் முழுவதும் பெற்றா கடைகளில் திரிந்து ஒரே நாளில் 3 லட்சத்து 34 ஆயிரம் ரூபா சேர்த்தேன். அது ஆலய அத்திவாரப்பணிகளுக்கு உதவியது. - என ரீ.றவிராஜ் அடிகளார் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு பங்குப் பணியினை பொறுப்பேற்ற அன்ரன் ஸ்ரிபன் அடிகளார் அனைத்து பணிகளையும் நிறைவு செய்து 2017ஆம் ஆண்டு மலர் வெளியீட்டுடன் ஆடம்பரமாக யாழ் ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை வைத்து திறந்து வைத்தார்.

**பிரமந்தனாறு இறை இரக்க ஆலயத்தில் பணியாற்றிய குருக்கள்**

இவ்வாலயத்தின் பணியில் ஏ.ஏவ்.பெனற் அடிகளார் (1992 - 1994), சி.ஜே. அன்ரனி பாலா அடிகளார் (1994 - 1996), பேணாட் றெக்ணோ அடிகளார் (1997), மரிய செபஸ்ரியன் அடிகளார் (1997 - 2001), யூட் நிக்சன் அடிகளார் (2001 - 2005), ரீ.றவிராஜ் அடிகளார் (2005 - 2009), எட்வின்நாதன் அடிகளார் (2010 - 2012), ஏ.புனித குமார் அடிகளார் (2012 - 2016), அ.அன்ரன் ஸ்ரிபன் அடிகளார் (2016 - 2017), சில்வெஸ்ரதாஸ் அடிகளார் (2017 - 2020), சி.ஜே.கியூ ஜெயரஞ்சன் அடிகளார் (2020), நிக்சன் கொளின்ஸ் அடிகளார் 2021 முதல் பணியாற்றி வருகிறார்.

'இயேசுவே! நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்' - என்ற மகுட வாக்குடன் இறை இரக்கப் பெருவிழா உலகம் முழுவதிலும் 24 ஏப்ரல் 2022இல் கொண்டாடப்படும் வேளை நாமும் இணைவோம்.

# அறிவாற்றலும் அர்ப்பணிப்பும் மிக்க கல்வியலாளன் அமரர் பேராசிரியர் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார்

**யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், உயிர் இரசாயனவியல் துறையின் தற்போதைய தலைவருமாகிய மறைந்த பேராசிரியர்.ச.பாலகுமாருக்கு இறுதி மரியாதை செலுத்தும் வகையில் இன்று 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 11 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனையொட்டி அவரை அஞ்சலிக்கும் வகையில் பல்கலைக்கழக சமூகத்தைச் சார்ந்தோரால் தொகுக்கப்பட்ட நினைவுக் குறிப்பு இது.**




பேராசிரியர் ச. பாலகுமார் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் பல்வகைகளில் ஒரு தனித்துவமான மனிதர் ஆவார். முற்றுமுழுதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு தனித்துவமான கல்வியியலாளன் எனும் பெருமைக்குரியவர்.

நவிண்டில் நெல்லியடியைப் பூர்வீகமாகக் கொண்ட அவர் அமரர்களான திரு. சந்திரசேகரம்பிள்ளை திருமதி. ராஜேஸ்வரி சந்திரசேகரம்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனாக 1969.07.29 அன்று மண்ணில் அவதரித்தார். அவருக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் வாய்க்கப்பெற்றனர். இயல்பாகவே ஆன்மீகநாட்டமும் இறை நம்பிக்கையும் கொண்ட குடும்பப் பின்னணி பேராசிரியர் அவர்களையும் அவ்வாறே வாழ்வித்தது. ஈற்றில் அவரது வாழ்வும் இறைசந்நிதான நிழலிலேயே நிறைவுற்றமையும் நினைவில் நிறையும் இயற்கையின் நியதியாகும்.

தனது ஆரம்பக்கல்வியை கரணவாய் தாமோதர வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை நெல்லியடி



மத்திய கல்லூரியிலும் கற்று உயிரியல் விஞ்ஞானப் பட்டக் கற்கைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டதாரி மாணவனாக இணைந்த அவரது தொடர்பு பின்னர் விஞ்ஞான முதுமாணி மாணவன், கலாநிதிப்பட்ட ஆய்வாளன் எனப் பரிமாணம் பெற்றதுடன் உதவி விரிவுரையாளர், சிரேஷ்ட விரிவுரையாளர், பேராசிரியர், துறைத்தலைவர், பீடாதிபதி, பதில் துணைவேந்தர் என தொழில்சார்ந்தும் விரிந்து சென்றது.

பேராசிரியர் ச. பாலகுமார் அவர்கள் விலங்கியலில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை நிறைவுசெய்த பின்னர் உயிர் இரசாயனவியல் துறையில் முதுமாணிப்பட்டத்தையும் அதே துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அவர் தனது கலாநிதிப் பட்ட ஆய்வை மறைந்த உயிர் இரசாயனவியல்துறை வாழ்நாள் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொண்டமை சிறப்புக்குரிய விடயமாகும்.

01.11.2001 இல் இருந்து 30.03.2003 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இரசாயனவியல் துறையில் ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்ட அவர் 03.03.2003 ஆம் ஆண்டு நிரந்தர சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். தொழில்வாழ்வில் படிப்படியாக முன்னேறிய அவர் 2019 ஆம் ஆண்டு திறமை அடிப்படையில் உயிர் இரசாயனவியல் துறையின் பேராசிரியராக உயர்வு பெற்றார்.

தனது தொழில்வாழ்க்கைக் காலத்தின் போது ஒரு பல்கலைக்கழக ஆசிரியனுக்கு விதிக்கப்பட்ட முப்பெரும் பணிகளான கற்பித்தல், ஆய்வு, கல்வி நிர்வாகம் எனும் தளங்களில் தனது தனித்துவ ஆற்றலினாலும் விசேடித்த குணாம்சங்களினாலும் காலக்கனதிமிக்க பல வரலாற்றுக் கடமைகளை ஆற்றியவர் பேராசிரியர் பாலகுமார் அவர்கள்.

உயிர் இரசாயனவியல் துறையின் தலைவராக நியமிக்கப்பட்ட அவர் தனது இறுதிக்கணம் வரை அந்தப் பதவியைத் தொடர்ந்த வண்ணமிருந்தார். 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் ஒன்பதாவது பீடாதிபதியாக போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மருத்துவபீடத்தின் பீடாதிபதியாகக் கடமையாற்றிய காலத்தில் பீடத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளிலும் தன் பங்களிப்பை நல்கினார். குறிப்பாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நிறைவுறாது இருந்த மருத்துவபீட கூவர் கலையரங்கத்தின் நிர்மாணிப்பு வேலைகளை நிறைவுறுத்தியமை மட்டுமன்றி நவீன வசதிகளுடன் மாணவர் பாவனைக்காகக் கையளித்தார். அத்துடன் பரீட்சை மண்டபம், இணை சுகாதாரக் கற்கைகளுக்கான புதிய கட்டடத் தொகுதி நிர்மாணம், உயிர் இரசாயனவியல் துறை ஆய்வுகூட புனரமைப்பு, மருத்துவபீட பேராசிரியியல் துறைகளுக்கான எட்டு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படும் கட்டடத்துக்காக காணியை அரச நன்கொடையாக பெற்று கட்டப் பணிகளை ஆரம்பித்தமை (கடந்த 40வருடங்களுக்கு மேலாக இடவசதியற்ற), மருத்துவபீடத்துக்கு அருகாமையில் பீடத்துக்காக காணி கொள்வனவு, பழைய மாணவர்களின் அனுசரணையில் மருத்துவபீட மாணவர் விடுதி விஸ்தரிப்புக்காக காணி கொள்வனவு, நன்கொடை அடிப்படையில் கொக்குவிலில் மருத்துவபீடப் பாவனைக்கென காணி பெற்றமை, பீடத்தின் உள்ளகச் சூழலை மீளவும் புதுப்பொலிவுடன் அழகுபடுத்தியமை என தனது அர்ப்பணிப்புமிக்க சேவையில் பல பெறுமதியான அடையாளங்களைப் பொறித்தார் அது மட்டுமன்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் **(JUICE)** மருத்துவ பீட இணைப்பாளராக 2018 ஆம் ஆண்டு பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நடத்தினார். அது மட்டுமன்றி இணை மருத்துவ விஞ்ஞான அலகினை பீடமாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

தனது தொழில்வாழ்வின் ஆரம்பநாள்களில் உலக வங்கியின் நிதி அனுசரணையில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அமுல்படுத்தப்பட்ட ஹூயூஜஷீசி திட்டத்தின் இணைப்பாளராக இருந்து பல்கலைக்கழகத்துக்கு கிடைத்த நிதியை வினைத்திறனாகப் பாவித்தமை மட்டுமன்றி மருத்துவ மாணவர்களின் கல்வித்தேவைக்கென புதிய பஸ் ஒன்றையும் மருத்துவபீடக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பன்னிரண்டு இருக்கைகளுடனான நிசான் வாகனம் ஒன்றையும் கொள்வனவு செய்து, அவற்றைக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவருவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். உயிர் இரசாயனவியல் துறை சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திட்டத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு சுவீடன் தேசத்துக்குச் சென்று தனது ஆய்வு அனுபவத்தை மேலும் மெருகூட்டப் பல புதிய விடயங்களைக் கற்றுக்கொண்டார்.

கற்பித்தலில் எப்போதும் புதுமைகளைப் புகுத்தும் விருப்புக் கொண்ட பேராசிரியர் பாலகுமார் அவர்கள் ஒரு கண்டிப்பும் கனிவும் மிக்க ஆசிரியராக தனது மாணவர்களால் அடையாளப் படுத்தப்பட்டார். புதிய தொழில்நுட்பங்களைக் கற்பித்தலுக்குத் துணைக்கொள்வதில் என்றும் ஆர்வத்துடன் செயற்பட்ட அவர், பல நவீன கற்றல் கற்பித்தல் உபகரணங்களை மருத்துவபீடம் கொள்வனவு செய்வதற்கு துணைநின்றார். மாணவர்களின் தனிப்பட்ட நலன்களில் அக்கறையுடன் செயற்பட்ட அவர் பல ஆண்டுகளாக மாணவர் ஆலோசகராக தனது பங்களிப்பை நல்கிவந்தார். மாணவர்கள் நலனில் அக்கறையுடன் இருந்த அதேவேளை எக் காரணத்துக்காகவும் அவர்களது கற்றல் கடமைகளில் எந்தச் சந்தர்ப்பத்திலும் சமரசங்களைச் செய்துகொள்ள அவர் முன்வந்தவரல்லர் என்பது தனது மாணவர்கள் ஆழக் கற்றல் அவசியத்தில் அவர் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்துகின்றது. உயிர் இரசாயனவியல் துறையில் முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவர்கள் பலரின் மேற்பார்வையாளராகவும் பரீட்சகராகவும் கடமையாற்றிய பேராசிரியர் அவர்கள் பல துறைசார் விற்பன்னர்களை அத்துறையில் உருவாக்கினார்.

எவ்வாறு தனது தொழில் வாழ்வை அதிகமாக நேசித்தாரோ அதேயளவுக்கு குறைவின்றி தனது குடும்பத்தினர் நலனிலும் அக்கறையுடனிருந்தார். தனது சகோதரர்களின் வளர்ச்சியிலும் அவர்களது பிள்ளைகளின் நலனிலும் அதீத அக்கறையுடனிருந்த அவர் அவர்களுக்காகவே தனது வாழ்வை தியாகம் செய்தார். பரம்பரை பரம்பரை ரீதியாகத் தனக்கு விதிக்கப்பட்ட சமய மற்றும் சமூகக் கடமைகளையும் தவறின்றி நிறைவேற்றி வந்த அவர், அவ் விடயங்களில் பிறர் இழைக்கும் தவறுகள் கண்டு அறச்சீற்றம் கொண்டவராகவிருந்தார். அவ்வியல்பே அவரது இவ்வுலக வாழ்வையும் நிறைவுறுத்தும் காரணியாகியது காலக்கொடுமையாகும்.

இயல்பாகவே தமிழ்த் தேசிய உணர்வுமிக்க அவர் அதனைப் பகிரங்க வெளிகளில் வெளிக்காட்டாவிட்டாலும் தன்னால் இயன்ற பங்களிப்பை தமிழ்த் தேசியத்துக்காக நல்கிவந்தார். அமரர் அவர்கள் பீடாதிபதியாகவிருந்த காலப்பகுதியில் 2012ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டபோது அவரை மீட்பதற்காக பல தரப்புக்களையும் சந்தித்து அதில் துரித வெற்றியும் கண்டார்.

பேராசிரியர் அவர்கள் இயல்பில் கலை இரசனைமிக்க ஒருவராககவிருந்தார். குறிப்பாக கம்பன் கழகம் மற்றும் தமிழ்ச் சங்க நிகழ்வுகளில் அவரது பெறுமதி கருதி வழங்கப்படும் அழைப்புக்களுக்கு மதிப்புக் கொடுத்து முன்வரிசையில் அமர்ந்திருந்து கலைநிகழ்வுகளை தன்னை மறந்து ரசித்து மகிழ்வது அவரை நன்கு அறிந்தோருக்கு தெரிந்தவிடயமாகும். இந்த கலை ரசிகத்தன்மையை அவர் மருத்துவபீடத்திலும் காண்பித்தார். அவர் பீடாதிபதியாகவிருந்த காலப்பகுதியில் மருத்துவபீட அபிவிருத்திக்கு நிதி சேகரிப்பதற்கு மருத்துவ மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் கலைநிகழ்வொன்றை 2013ஆம் ஆண்டு கூவர் கலையரங்கில் நிகழ்த்தியமை சிறப்புக்குரியது. மாணவர்கள் இளமைத் துடிப்புடன் குறும்புத்தனமாக செய்யும் கலைப் படைப்புக்களையும் பெருந்தன்மையுடன் ஏற்று அவர்களை வழிப்படுத்தும் வாண்மையும் அமரரிடம் வாய்க்கப்பெற்றிருந்தது.

தனக்கு ஒவ்வாத விடயங்களைக் கண்டு அதற்கு உடனடி எதிர்வினைகளை ஆற்றுவது பேராசிரியரின் பலமாகவும் பலவீனமாகவும் இருந்தது. எத்தகைய எதிர்வினைகளை ஆற்றினாலும் மற்றவர் மனம் நோகும் போது இளகிய மனத்துடன் அவர்களை அணுகும் இயல்பும் அவரிடம் சமாந்தரமாக வாய்த்திருந்தது. மனஎழுச்சி நுண்ணறிவில் ஒரு கூட்டுக்கலவையாகவே அவர் மற்றவர்களால் மதிக்கப்பட்டார். இவ்வாறு பல பரிமாணம் கொண்ட பேராசிரியர் ச. பாலகுமார் அவர்கள் 13.04.2022 அன்று மாலை 5.00 மணியளவில் மாரடைப்பினால் உயிர் துறந்த செய்தி அவருக்கு அணுக்கமான பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தனது உடல், உள ஆரோக்கியத்தில் அதிக கவனத்துடனிருந்த ஒருவருக்கு இத்தகைய முடிவு நிகழ்ந்த போது மருத்துவ நண்பர்கள் உள்ளிட்ட பலரும் திகைப்புற்றனர்.

அமரரது வாழ்வு மற்றவர்களுக்கு பல வழிகளிலும் முன்னுதாரணமான வாழ்வு. அவரது தடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எப்போதுமிருக்கும். மருத்துவபீடத்தில் அவரது பிரசன்னம் ஆத்ம நிலையிலும் நிலைத்திருக்கும். உயிர் இரசாயனவியல் துறையில் அவர் உணர்வுகள் என்றும் செறிந்திருக்கும். அமரத்துவ வாழ்வு பெற்ற பேராசிரியர் பெருமை என்றும் நிலைக்கப் பிரார்த்திப்போம்.

காலைக்கதிர்
Kalaikkathir

# வீட்டுக்கே போய்விடுங்கள்!



## ராஜபக்ஷக்களிடம் எதிரணி வேண்டுகோள்

பதவி ஆசைகளைக் கைவிட்டு ராஜபக்ஷக்கள் அனைவரும் பதவிகளிலிருந்து விலகி வீட்டுக்குச் செல்வதே சிறந்தது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க வேண்டுமெனில் உறுதியான அரசு ஆட்சியில் இருக்க வேண்டும்.

ஊழல், மோசடி மிக்க – ஸ்திரமற்ற அரசை வைத்துக்கொண்டு நெருக்கடி நிலைமைக்குத் தீர்வுகாண முடியாது. அதேவேளை, சர்வதேசத்தின் நம்பிக்கை யைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது.

ராஜபக்ஷ குடும்பம் ஆட்சியில் இருந்தால் பொருளாதார நெருக்கடி நிலைமை மென்மேலும் அதிகரிக்கும். எனவே, பதவி ஆசைகளைக் கைவிட்டு ராஜபக்ஷக்கள் அனைவரும் பதவிகளிலிருந்து விலகி வீட்டுக்குச் செல்வதே சிறந்தது – என்றார்.

## 2 கோடி 70 லட்சம் ரூபா கடவத்தையில் கொள்ளை

கொழும்பு, ஏப்ரல் 17

கடவத்தை நகரிலுள்ள ஆடை விற்பனைநிலையமொன்றில்கொள்ளை சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வர்த்தக நிலையத்திலிருந்து சுமார் 2கோடி 70 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், வங்கி கொள்ளை உள்ளிட்ட பல்வேறு கொள்ளை சம்பவங்களுடன் இதற்கு முன்னரும் தொடர்புப்பட்டவர் எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கடவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸாரைத் தாக்கினார்களாம் புதுக்குடியிருப்பில் இருவர் கைது

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் பொலிஸாரை தாக்கியமை மற்றும் விபத்தை ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் இருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் கைவேலிப் பகுதியில் ஒரு மோட்டார் சைக்கிளில் வீதியில் இருவர் சாகசம் காட்ட முற்பட்ட வேளை, வீதியால் பயணித்த ஒருவருக்கு விபத்தை ஏற்படுத்திவிட்டு அவர் மீது தாக்குதலும் நடத்தியுள்ளார்கள்.

இச்சம்பவத்தைக் கடமையில் இருந்த பொலிஸார் சென்று பார்த்த போது பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்ற அவர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

இவர்கள் விபத்தை ஏற்படுத்தி ஒருவரை காயப்படுத்திவிட்டு, அவர் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை ஆகிய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்தியவர்களில் ஒருவரும் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அனைத்துத் தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அமைப்புகள், தமிழ் அரசியல் கட்சிகள் என்பன பங்குபற்றியிருந்தன.

அத்துடன் அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான குழு ஒன்றை அமைத்து அதனூடாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா தெரிவித்தார்.

### மணிவண்ணன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இடம்பெற்றது.

இதில் யாழ். மாநகர மேயர் வி. மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சி.இளங்கோ, நல்லூர் பிரதேச சபை தவிசாளர் மயூரன், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த யாழ். மாநகர மேயர் மணிவண்ணன்,

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களில் இருக்கின்ற கட்சியினுடைய செயற்பாட்டாளர்களை அழைத்துஎதிர்காலசெயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தோம். எங்கள் கட்சியை நிறுவனமயப்படுத்தி எதிர்வரும் காலத்தில் செயற்படுவதற்கு இணங்கி இருக்கின்றோம்.

கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இயங்குகின்றவர்களுக்கு மாத்திரமே அதன்மீது உரிமை இருக்கின்றது. நடைமுறையில் இரண்டு பிளவுகள் காணப்படுகின்றன. ஆனாலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எட்டு மாவட்ட அமைப்பாளர்களும் அண்மையில் வவுனியாவில் ஒன்றுகூடி கட்சியைத் தூய்மைப்படுத்தி முன்கொண்டு செல்வதற்குத் தீர்மானித்துள்ளோம் – என்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமக்குரியது என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் அணி உரிமை கோரி வருகின்றது.

யாழ். மாநகர சபை உறுப்பினராக இருந்தவரான மணிவண்ணன் மேயராகுவதற்கு முன்னர் இதே தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியின் உறுப்பினராக இருந்தார். எனினும், 2020 நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவரைக் கட்சியைவிட்டு நீக்கியதாக கஜேந்திரகுமார் தரப்பு அறிவித்தது. அதை எதிர்த்து மணிவண்ணன் வழக்குத் தொடர்ந்தார். அதில் மணிவண்ணனைக் கட்சியை–விட்டு நீக்கியமை தவறு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கிடையில் யாழ். மாநகர சபை மேயர் பதவியையும் மணிவண்ணன் கைப்பற்றிக்கொண்டார்.

அதிலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் மணிவண்ணன் அணி ஒன்று உருவாகியது. அன்று தொடக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தன் வசப்படுத்துவதற்கான முனைப்புகளில் மணிவண்ணன் அணியினர் ஈடுபட்டு வந்தனர்.

## காலிமுகத்திடலில் திடீரெனக் குவிக்கப்பட்ட பொலிஸ் கனரக வாகனங்கள் அகற்றப்பட்டன

### போராட்டத்தைச் சீர்குலைக்கும் அரசின் முயற்சி பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனச் சட்டத்தரணிகள் எச்சரிக்கை



கொழும்பு - காலிமுகத்திடலில் நேற்று காலை திடீரெனக் குவிக்கப்பட்ட பொலிஸ் கனரக வாகனங்கள் முற் பகல் வேளை முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு இன்று 9 ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்கின்றது.

இந்நிலையில், காலிமுகத்திடல் பகுதியில் நேற்று காலை திடீரென பொலிஸ் கனரக வாகனங்கள் குவிக் கப்பட்டிருந்தன. அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதற்கு எதிராகச் சமூக வலைத் தளங்களில் கடும் கண்டனங்கள் பகிரப்பட்டிருந்தன.

மக்களின் அமைதியான போராட் டத்தைச் சீர்குலைக்கும் அரசின் முயற்சி நாட்டுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என இலங்கை சட் டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன் றின் மூலமும் அறிவித்திருந்தது.

அதன்பின்னர் பொலிஸ் கனரக வாகனங்கள் அங்கிருந்து முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

## மண்வெட்டியால் அடித்துக் கொலை

மஹாவெல தெல்கொல்ல பிரதேசத்தில் ஒருவர் மண்வெட்டியால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

வீட்டில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

படுகாயமடைந்த நபர் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 55 வயதுடைய தெல்கொல்ல, கனேகெதரவத்தை பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மனைவியின் முன்னாள் கணவரின் மகன் அவரைத் தாக்கினார் எனவும், அவர் அந்தப் பகுதியை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரைக்கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

### பிரேரணைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மற்றும் குற்றப் பிரேரணை ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மைப் பலம் இல்லாத சஜித் அணியினர் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை ஆகியவற்றைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளமை சிறுபிள்ளைத்தனமானது.

எமது அரசுக்கு எதிரான பிரேரணைகள் தோற்கடிக்கப்படும் என்றும் தெரிந்தும் கூட பிரதான எதிரணியினர் ஏன் அதனைக் கொண்டுவர முயல்கின்றனர் என்று புரியவில்லை.

என்னதான் நடந்தாலும் பிரேரணைகள் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசைக் கவிழ்க்கவே முடியாது. எமது அரசைக் கவிழ்க்க முயல்வோர் முதலில் தமது நிலையை உணரவேண்டும் – என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.04.2022இல் வெளியிடப்பெற்றது.